வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 26.06.2021 சனிக்கிழமை | இதழ் : 205 | பக்கங்கள் : 16




# இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட யாருக்கும் உரிமையில்லை

## விசேட உரையில் ஜனாதிபதி உறுதிபட தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 26

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் எந்த தரப்பினரும் தலையீடு செய்வதற்கு தாம் இடமளிக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிபட தெரிவித்துள்ளார்.

15



## எரிபொருள் விலை உயர்வை கண்டித்து சைக்கிளில் சபைக்கு வந்த உறுப்பினர்கள்

நோர்வூட், ஜூன் 26

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நோர்வூட் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபை அமர்வுக்கு நேற்று சைக்கிளில் சென்றனர்.

நோர்வூட் பிரதேச சபையின் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்களே கறுப்புப்பட்டி அணிந்து சைக்கிளில் சபை அமர்வுக்கு சமுகமளித்தனர்.

15

## நேற்றும் 1,859 பேருக்கு மாத்திரமே கொரோனா

கொழும்பு, ஜூன் 26

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,859 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

15

## மனப்பயமே காரணம்!

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் திடீர் உடல் நலப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு கொரோனா தடுப்பூசி காரணமல்ல என்றும் மனப்பயம் காரணமாகவே அவர்கள் வைத்தியசாலையை நாடினர் என்றும் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவை

15

## தொற்றாளர்களின் எண்ணிக்கை எகிறினால் மீண்டும் நாடு முடங்கும்

### இராணுவ தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 26

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டால் மீண்டும் பயணக் கட்டுப்பாட்டை அல்லது முடக்க நிலையை அமுல்படுத்த நேரிடும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

15

## குடாநாட்டில் அடுத்த வாரம் தடுப்பூசியின் 2ஆவது டோஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கொரோனா தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக தடுப்பூசிகள் வழங்கப்பட்டவர்களுக்கு அதன் தொடர்ச்சியாக ஜூன் மாதம் 28ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஜூலை மாதம் 03 ஆம் திகதி சனிக்கிழமை வரை இரண்டாவது டோஸ் வழங்குவதற்கு நட

15

## சாவகச்சேரி வீட்டு திட்ட பட்டியலை புதிதாக திருத்தஞ்செய்ய இணக்கம்!



### முறைப்பாட்டையடுத்து பிரதமரின் இணைப்பு செயலர் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 26,

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள அரசாங்க வீட்டுத்திட்டம் வழங்கும் திட்டத்தில் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் சலுகைகள் அடிப்படையில் சிலருக்கு வழங்கப்படுவதாகப் பிரதமர் அலுவலகத்திற்கு மக்கள் முறையிட்டதையடுத்து பிரத

15

## நாட்டில் மேலும் 48 பேர் தொற்றினால் மரணம்!

கொழும்பு, ஜூன் 26

நாட்டில் மேலும் 48 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தனரென சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு நேற்று வெள்ளிக்

15




## மாற்றமடையும் சர்வதேச சூழலை சாதகமாக பயன்படுத்த வேண்டும்

### ஒருமித்த நிலைப்பாட்டுடன் செயல்பட தமிழ்த் தேசிய கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

“சர்வதேச சூழலிலேயே எமக்கு சார்பான பல விடயங்களுக்காக வல்லரசு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் இவ்வேளையில் நாம் ஒருமித்த நிலைப்பாட்டில் அரசியல் விடயங்களை தாயகப் பரப்பில் கையாள்வதன் மூலம் சாதகமான உள்ளக அரசியல் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்த முடியும்” எனச் சுட்டிக்காட்டியுள்ள ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இது குறித்து நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ள மெய்நிகர் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

நான்கைந்து பேர் இருந்து பேசிக்கொண்டிருந்தோம்.

ஊர்க்குருவியின் முன்னால் ஒரு லீற்றர் தண்ணீர்ப் போத்தலை வைத்தார்கள். பலத்த தாகத்தில் இருந்ததால், எடுத்து 'மடக்மடக்' என்று குடித்துவிட்டு தண்ணீர்ப் போத்தலை மேசையில் வைத்தேன்.

முன்னால் இருந்தவர் கேட்டார் ' என்னடாப்பா அரைப்போத்தலை குடித்துவிட்டாய்? என்று.

"ஏன் நீங்கள் குடிக்க அரைப்போத்தல் தண்ணீரை மிச்சம் விட்டிருக்கிறேன் என்று சொல்லலாம்தானேடாப்பா?", என்றேன் நான்.

எப்போதுமே இதுபோன்று குறைகளையே சொல்லிப் பழக்கப்பட்டவர்கள் நமது ஊடகவியலாளர்கள்.

அரைவாசியைக் குடித்துவிட்டடேன் என்பதும் அரைவாசியை மற்றவர்களுக்காக விட்டுவைத்திருக்கிறேன் என்பதும் ஒன்றுதான். ஆனால், நமது ஊடகவியலாளர்கள் எப்போதும் எதிர்மறையாகவே எழுதிப்பழக்கப்பட்டவர்கள். அவர்கள் இப்படித்தான் சொல்வார்கள். மாகாண சபைகளைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அதனை எமது ஆரம்பமாகக் கருதியாவது எல்லோரும் இணைந்து கொள்ளவேண்டும் என்றும் இந்தப் பத்தியில் பல தடவை குறிப்பிட்டிருந்தோம்.

ஈழநாடு ஆசிரியரும் தனது கருத்தில் இதுகுறித்து பல தடவைகள் சொல்லிவிட்டார். ஆனால், அதனை நமது தலைவர்கள் யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை என்றே தெரிந்தது.

சில தினங்களுக்கு முன்னர், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் கொள்கை பரப்பு செயலாளர் அருந்தவபாலன் கிளிநொச்சியில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

அந்தச் சந்திப்பில், தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தேர்தலுக்காக கூட்டணி அமைக்கப்படமாட்டாது என்று அவர் தெரிவித்திருந்தாரென செய்திகள் வெளியாகியிருந்தன.

தேர்தலுக்காக கூட்டணி அமைக்கப்படமாட்டாது என்றால், அதன் அர்த்தம் கொள்கை ரீதியாகவே கூட்டணி அமைக்கத் தயாராக இருப்பதாக கொள்ளலாம் என்றும், அப்படியெனில் ஏற்கனவே இந்த கூட்டணியிலுள்ள கட்சிகள் எல்லாம் ஒரு கொள்கையில் இருப்பதை உறுதிசெய்கின்றனவா என்ற சந்தேகமும் இந்த ஊர்க்குருவிக்கு உண்டு என்பதை முன்னர் பதிவு செய்திருந்தோம்.

இதனை படித்துவிட்டு அந்த கூட்டணிக்கு வேண்டிய ஒருவர் ஒரு காணொலி பதிவை அனுப்பியிருந்தார்.

அந்த காகொணலிப் பதிவு, வேறு ஒன்றுமல்ல, கிளிநொச்சியில் அருந்தவபாலன் நடத்திய ஊடக சந்திப்பிலிருந்து சில விடயங்கள் குறித்து அருந்தவபாலன் தெரிவித்த கருத்துக்கள் அதில் இருந்தன. மேலே சொல்லிய தண்ணீர்ப் போத்தல் கதைபோல அருந்தவபாலனின் கருத்தை எடுத்திருந்தாலும் பரவாயில்லை. ஆனால், அவர் சொல்லிய முதல்பகுதியை விட்டுவிட்டு ஒரு விடயத்தை மட்டும் செய்தி ஆக்கியிருப்பது தெரிந்தது. இது வேண்டும் என்று செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை.

மாகாண சபைகள் பற்றி இந்த ஊர்க்குருவியும் ஈழநாடுவும் எத்தகைய கருத்துக்களை இதுகாலவரை பல தடவைகள் சொல்லியதோ அதை மிக தெளிவாக அதேவேளை அழுத்தமாக அருந்தவபாலன் இந்த ஊடக சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

"மாகாண சபைகளுக்கு எப்போது தேர்தல் வரும் என்பது தெரியாது. ஆனால், தேர்தலை தள்ளிப் போட்டுக்கொண்டே வரும் அரசாங்கம், மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கின்றது. எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து இதற்கு எதிராக குரல்கொடுக்கவேண்டும். இந்தியாவுடன் இணைந்து மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பெற முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் அருந்தவபாலன், இந்த விடயத்தில் ஒன்றிணையும் கட்சிகள் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றால் அதனைக் கைப்பற்றுவதற்கும் இணைந்து செயல்படலாம்", என்றே வலியுறுத்தியுள்ளார்.

ஆக, எல்லோரும் சேர்ந்து மாகாண சபைகளைக் காப்பாற்ற வேண்டும், அதற்காக இந்தியாவுடன் இணைந்து அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். இதுதான் அவர் அந்த ஊடகர் சந்திப்பில் வலியுறுத்திய செய்தி.

இத்தகைய முயற்சிக்காக கூட்டமைப்புடன் இணையலாம் என்ற செய்தியை முதலில் சொன்ன அருந்தவபாலன், தேர்தலுக்காக மாத்திரம் இணைய முடியாது என்றார். ஆனால், நமது ஊடகங்கள், தேர்தலுக்காக கூட்டமைப்புடன் இணைய முடியாது என்ற செய்திக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றன.

அருந்தவபாலன், இந்த தகவலை வெறும் ஊடக மாநாட்டில் சொல்லியதோடு நிறுத்தியிருக்கக்கூடாது. இதனையே ஓர் 'இயக்கமாக' முன்னெடுக்கவேண்டும். அது அவசியமானது மாத்திரமல்ல, அவசரமானதும்கூட.

**- ஊர்க்குருவி**

# பொது வைத்தியசாலைக்கான நிதியை ஒதுக்குவது சுகாதார அமைச்சு அல்ல!

## வடக்கு ஆளுநருக்கு சீ.வீ.கே. ஆலோசனை



யாழ்ப்பாணம், ஜுன் 26

மாவட்ட பொது வைத்தியசாலைகளுக்கான நிதியை சுகாதார அமைச்சு நிதி ஒதுக்குவதில்லை. தேசிய திறைசேரியாலேயே வழங்கப்படுகின்றது. எனவே, அவற்றை மத்திய அரசுக்கு கையளிக்க வேண்டிய உருவாகாது. எனவே இவற்றைக் கையளிக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று கோரி வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸூக்கு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கடிதம் ஒன்றை மீண்டும் அனுப்பி வைத்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் அனுப்பி வைத்த அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"கடந்த 22.06.2021 ஆம் திகதி இந்த விடயம் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டபொழுது, பதிலளித்து பேசிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பின்வருமாறு கூறியிருந்தார். "மாவட்டங்கள் விரும்பாவிட்டால் நாம் வைத்தியசாலைகளை எமது பொறுப்பில் எடுக்க மாட்டோம். அதேவேளை, மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கப்படமாட்டாது.", எனினும், இந்தக் கூற்றில் அடங்கிய சில விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

வட மாகாணத்தில் உள்ள எந்த வைத்தியசாலையும் மாவட்ட நிர்வாகங்களின் கீழ் இல்லை. அவ்வாறான எந்தவித சட்டபூர்வ கட்டமைப்பும் இல்லை என்பதால் மாவட்டங்கள் விரும்பாதுவிட்டால் என்ற நிலைமை பொருத்தமற்றது. வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகள் சட்டரீதியாக மாகாண சபை நிர்வாகத்தின் கீழேதான் உள்ளன.

இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் யாவும் தேசிய வரவு - செலவுத் திட்டத்தின்படி தேசிய திறைசேரியினால் மாகாண சபைக்கு வழங்கப்படுகின்றது. எனவே, மாகாண வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சு நிதி வழங்குவது என்ற பிரச்னை எழாது. எனினும், விசேட சூழ்நிலைகளில் மக்கள் நலன்கருதி சுகாதார அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்யலாம். அது அமைச்சரின் தற்றுணிவுத் தெரிவாகும். அந்த வகையில் அவர் மாகாண சபைக்கு விசேட நிதி எதையும் வழங்காது தவிர்க்கலாம் அதனை கேள்விக்குட்படுத்த முடியாது.

ஆயினும், இதுவரை காலமும் தேசிய வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் மூலமே மாவட்ட பொது வைத்தியசாலைகள் உட்பட சகல மாகாண வைத்தியசாலைகளும் மாகாண சபையால் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதில் எந்த மாற்றமும் முன்மொழியப்படவில்லை. எனவே, மாவட்ட பொது வைத்தியசாலைகளுக்கான ஒதுக்கீடுகள் வழமை போல தேசிய வரவு - செலவுத் திட்டத்தின் மூலமாக மாகாண சபைக்கே வழங்கப்படும் என்பது தெளிவு. அமைச்சரும் இதனை மறுதலிக்கவில்லையாதலால் வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட நான்கு மாவட்ட பொது வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சுக்கு கையளிக்க வேண்டிய நிலை உருவாகாது. எனவே, இவற்றை கையளிக்கும் நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.", என்றுள்ளது.

# நல்லூரில் விடுதி ஒன்று முற்றுகை; இரு பெண்கள் உட்பட 6 பேர் கைது!

யாழ்ப்பாணம்,ஜுன்26

யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெற்றன என்று கூறப்படும் விடுதி ஒன்று யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று முற்றுகையிடப்பட்டது.



இதன்போது, குறித்த விடுதி யில் இருந்து இரண்டு பெண் கள், 3 இளைஞர்கள் மற்றும் விடுதி உரிமையாளர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் கோயில் வீதியி லுள்ள விடுதியில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடு களுக்கமைய, அந்த விடுதியைச் சோதனையிடுவதற்கான அனுமதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பெறப்பட் டது.

இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் நேற்று அந்த விடுதியைச் சுற்றி வளைத்து அங்கிருந்த இரண்டு பெண்கள் உட்பட 6 சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் குருநகர், மானிப் பாய் மற்றும் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் 6 பேரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான், சந்தேக நபர்கள் ஆறு பேரையும் வரும் ஜுலை 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-3)

# ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ் ஸ்ட்ரிங்கர் சீனாவில் வாழ்ந்திருந்த மனிதர்களின் எச்சங்களை சமீப காலமாக ஆய்வு செய்து வருகிறார். வெவ்வேறு மனித இனங்கள் ஒரே காலகட்டத்தில் ஒரே பகுதியில் வாழ்ந்து இருந்தனர் என்பதை நேஷெர் ரம்லா ஆதி மனித இனத்தின் கண்டுபிடிப்பு உறுதிப்படுத்துகிறது. மேற்கு ஆசியப் பகுதிகளிலும் இதேபோல நடந்துள்ளது என்று அவர் கூறுகிறார்.

ஆனால், இஸ்ரேலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த பழங்கால மனித படிமங்களை நியாண்டர்தால் மனிதர்கள் உடன் தொடர்புபடுத்துவது இப்பொழுதே, மிகவும் முன்கூட்டிய கணிப்பு என்று நான் கருதுகிறேன். நேஷெர் ரம்லா மனித இனத்தின் எச்சங்கள் மற்றும் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித படிமங்கள் ஆகியவற்றின் இடையே குறிப்பிட்ட தொடர்புகள் ஏதேனும் இருக்குமா என்பது பற்றியும் நான் குழப்பமாக உள்ளேன் என்று அவர் கூறுகிறார்.

நேஷெர் ரம்லா இனத்தின் எச்சங்கள் வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்கள் புழங்கிய பகுதியில் அமைந்திருக்கும் புதைகுழி ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த பகுதியில் அவர்கள் காட்டு விலங்குகளை வேட்டையாடி இருக்கலாம். ஏனென்றால் ஆயிரக்கணக்கான கல் கருவிகளும் வேட்டையாடப்பட்ட விலங்குகளின் எலும்புகளும் இந்தப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
26.06.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## பஸில் ராஜபக்ஷ வந்தால்?

அரசாங்கம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது. ஒருபுறம் பொருளாதார ரீதியான நெருக்கடிகளை சமாளிக்க முடியாமல் தடுமாறுகின்றது. மறுபுறம், உட்கட்சி பிரச்னைகளால் அவதிப்படுகின்றது. ஆளும் பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளுக்கும், பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் தொடர்ந்தும் ஒருவகையான இழுபறி நிலைமை காணப்படுகின்றது. இது தொடர்பில் பஸில் ராஜபக்ஷமீதும் குற்றச்சாட்டுகள் உண்டு. பங்காளிக் கட்சிகள் அவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றனர்.

தற்போது, பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வரவுள்ளதான செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அடுத்த மாதம் ஆரம்பப்பகுதியில் பஸில், தேசிய பட்டியல்மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவார், அதனைத் தொடர்ந்து, நிதியமைச்சராக பதவியேற்பார் என்றும் செய்திகள் வெளிவருகின்றன. நிதியமைச்சு தற்போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின்கீழ் இருக்கின்றது.

19ஆவது திருத்தச்சட்டத்தின்கீழ், இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது. இதன் காரணமாகவே பஸில் தேர்தலில் போட்டியிட முடியாமல் இருந்தது. அமெரிக்க குடியுரிமையை பெற்றிருக்கும் பஸில் ராஜபக்ஷ, அதனை இரத்துச்செய்ய விரும்பவில்லை. ஆனால், 20ஆவது திருத்தச்சட்டத்தின்கீழ், இரட்டை குடியுரிமை தொடர்பான தடை நீக்கப்பட்டது. ரணில் - மைத்திரி ஆட்சியில் ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர்களான கோட்டாபய மற்றும் பஸில் ஆகியோரை இலக்குவைத்தே, மேற்படி தடை ஏற்படுத்தப்பட்டது. தங்களை இலக்குவைத்து கொண்டு வரப்பட்ட சட்ட ஏற்பாட்டை இல்லாமலாக்குவதே ராஜபக்ஷக்களின் பிரதான இலக்காக இருந்தது.

ராஜபக்ஷக்கள் மீளவும் ஆட்சியை கைப்பற்றிய பின்னர், பஸில் ராஜபக்ஷ ஒருவர்தான் பாராளுமன்றத்திற்கு வெளியில் இருந்தார். அந்த குறையும் இப்போது இல்லாமல் போகப்போகின்றது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கின்றபோதும், பஸில் ராஜபக்ஷவே, பொருளாதார அமைச்சராக இருந்தார்.

பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக வருவதால் அப்படி என்ன அதிசயங்கள் நடந்துவிடப் போகின்றன? எவர், எந்த பொறுப்பில் அமர்ந்தாலும் கூட, நாட்டில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படாமல், வெறுமனே நபர்களை மாற்றுவதால் நாட்டின் பொருளாதார நிலையில் குறிப்பிடத்தகு மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை. கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒரு பொருளாதார திட்டமிருந்தது. அதாவது, நாட்டின் பொருளாதாரத்தை தொழில்மயப்படுத்துதல்.

இந்த அடிப்படையில்தான் பல்வேறு இறக்குமதிகளை நிறுத்தி, அவற்றை இலங்கையில் உற்பத்தி செய்யவேண்டும் என்னும் திட்டத்தை நோக்கி கோட்டாபய நகர்ந்தார். ஆனாலும், கொரோனா நிலைமை அவரின் முயற்சிகளுக்கு பாதகமாக அமைந்தது. இந்த நிலையில், நிதி அமைச்சராக பஸில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டால், அவர் புதிய திட்டங்களின் வழியாக நாட்டை கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஈடுபடக்கூடும். ஆனால், எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டாலும்கூட, உலகத்தோடு ஒத்துப்போகும்போது மட்டுமே, உலக நாடுகளிடமிருந்து உதவிகளை பெறமுடியும்.

# ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய ஆதிமனித இனம்!

## மண்டைஓட்டில் வெளியான இரகசியம்

சுமார் ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தற்போதைய மனித இனம் வாழ்ந்த - அதே காலகட்டத்தில் வாழ்ந்த ஆதி மனித இனம் ஒன்றை இஸ்ரேலில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஆதி மனித இனம் வாழ்ந்திருந்தது இதற்கு முன்பு அறியப்படவில்லை. இஸ்ரேலில் உள்ள ரம்லா எனும் நகரத்தின் அருகே கண்டறியப்பட்டுள்ள இந்த எச்சங்கள் அந்த ஆதி மனித இனத்தில் “கடைசியாக வாழ்ந்திருந்தவர்களின்” எச்சங்கள் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஆண்டுகள் மற்றும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த நபர் ஒருவரின் பகுதி அளவு மண்டை ஓடு மற்றும் தாடை எலும்பு ஆகியவையும் தற்போது கண்டறியப்பட்டுள்ள எச்சங்களில் அடக்கம்.

இந்தக் கண்டுபிடிப்பின் விவரங்கள் ‘சயன்ஸ்’ எனும் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன. ஐரோப்பிய பகுதியில் நியாண்டர்தால் மனிதர்களும் அவர்களுக்கு நிகரான ஆசிய மனித இனத்திற்கும் தோற்றமாக அமைந்த, பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஓர் ஆதி கால மனித இனத்திலிருந்து தற்போது கண்டறியப்பட்டுள்ள மனித இனம் தோன்றி இருக்கலாம் என்று இந்த குழுவின் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

தற்பொழுது புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள இந்த இனக்குழுவின் பரம்பரைக்கு ‘நேஷெர் ரம்லா ஹோமோ’ (Nesher Ramla Homo) என்று பெயரிட்டு அறிவியலாளர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி பற்றிய கதைக்கு, குறிப்பாக நியாண்டர்தால் மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றிய கதைக்கு, இந்தக் கண்டுபிடிப்பு மறுவடிவம் தருவதாக டெல்அவிவ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஹிலா மே தெரிவித்துள்ளார்.

“இது அனைத்தும் இஸ்ரேலில் தொடங்கியுள்ளது; இங்கு கண்டறியப்பட்டுள்ள எச்சங்கள்தான் பிற இனத்தினருக்கான தோற்றமளித்த ஆதாரமாக இருந்துள்ளது. இடைப்பனிக்காலத்தின் து இந்த நேஷெர் ரம்லா இனமக்கள் மத்திய கிழக்கு பகுதியில் இருந்து ஐரோப்பிய பகுதியை நோக்கி அலை அலையாக புலம்பெயர்ந்தனர்,” என்று அவர் தெரிவித்தார்.

சுமார் 4 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நியர் ஈஸ்ட் பகுதியில் நேஷெர் ரம்லா மனித இனத்தின் தொடக்ககால மனிதர்கள் வாழ்ந்தனர் என்று இந்த ஆராய்ச்சிக் குழுவினர் நம்புகிறார்கள்.

ஐரோப்பா கண்டத்தில் வாழ்ந்த நியாண்டர்தால் மனிதர்களுக்கு முந்தைய கால ஆதி மனிதர்கள் மற்றும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆதிமனிதர்கள் ஆகியோரிடையே ஒற்றுமை இருப்பதையும் இந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். லெவன்ட் (Levant) பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வெவ்வேறு இனங்களுக்கு இடையே இருக்கும் தொடர்பை முதல் முறையாக எங்களால் அறிய முடிகிறது என்று டெல் அவிவ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த கலாநிதி ரேச்சல் சரீக் தெரிவிக்கிறார்.

கெசம், ஜூட்டியே, தாபுன் உள்ளிட்ட பகுதிகளில் அமைந்துள்ள குகைகளில் பல மனித படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், அவை இந்த குறிப்பிட்ட மனித இனத்தை சார்ந்தவைதான் என்று கூற முடியாத ஒரு காலகட்டத்தைச் சேர்ந்தவையாக இருந்தன. தற்போது நேஷெர் ரம்லா இனத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள எச்சத்துடன் அவற்றின் வடிவங்களை ஒப்பிட்டு பார்க்கும்பொழுது அவற்றையும், புதிதாக கண்டறியப்பட்டுள்ள ஆதி மனித இனத்திற்கு உள்ளடக்க முடிகிறது என்று அவர் தெரிவிக்கிறார்.

இந்த ஆதி மனித இனம் நியாண்டர்தால் மனிதனின் முன்னோர்கள் என்று கலாநிதி ஹிலா மே தெரிவிக்கிறார். தொடக்க காலத்தில் நியாண்டர்தால் மனிதர்கள் லெவன்ட் பகுதியில் இருந்தார்கள். பிற மனித இனங்களுடன் சேர்ந்து இனப்பெருக்கம் செய்யும்போது ஐரோப்பாவுக்கு இடம்பெயர்ந்தார்கள் என்று அவர் தெரிவிக்கிறார்.

மற்றவர்கள் கிழக்கு நோக்கிப் புலம்பெயர்ந்து தற்போது இந்தியா மற்றும் சீனா இருக்கும் பகுதிகளுக்கு சென்றனர். கிழக்காசியாவில் வாழ்ந்த அழிந்துபோன மனித இனத்துக்கும் ஐரோப்பாவில் வாழ்ந்த நியாண்டர்தால் மனித இனத்துக்கும் இடையே இதன் காரணமாக தொடர்பு இருக்கக்கூடும் என்று பேராசிரியர் இஸ்ரேல் ஹெர்ஷ்கோவிச் தெரிவிக்கிறார்.

கிழக்கு ஆசியப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட சில படிமங்கள் நேஷெர் ராம்லா மனித இனத்தை போலவே நியாண்டர்தால் மனித இனத்தின் கூறுகளை கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவிக்கிறார்.

இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதாகக் கூறும் முடிவுகள் சர்ச்சைக்குரியனவாக இருந்தாலும் இஸ்ரேலில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் படிமங்கள் மற்றும், ஐரோப்பிய மற்றும் ஆசிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் படிமங்கள் ஆகியவற்றுக்கும் இடையே இருக்கும் ஒற்றுமைகள் அடிப்படையில் தாங்கள் இவற்றை கூறுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

லண்டனில் உள்ள நச்சுரல் ஹிஸ்ட்ரி அருங்காட்சியகத்தை சேர்ந்த பேராசிரியர்

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 26 சனிக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 11
நல்ல நேரம் : 05.55 - 07.25
ராகு காலம் : 13.25 - 11.55
திதி : பிரதமை



## இன்றைய ராசிபலன்

26.06.2021

**மேடம்** குடும்பத்தினரை அனுசரித்துப் போக வேண்டியிருக்கும் யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வீர்கள். அக்கம் பக்கத்தினரின் செயல்களால் எரிச்சல் அடையலாம்.

**இடபம்** நேற்று இருந்த டென்ஷன் நீங்கி அமைதி ஏற்படும். பணியாளர்கள் சிலரது எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டி வரும். மோதல் போக்கு வேண்டாம். போராடி வெல்வீர்கள்.

**மிதுனம்** முயற்சிகளில் தாமதம் இன்றி வெற்றி கிடைக்கும். தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பதால் பிரச்னை ஏற்படலாம். தனிப்பட்ட காரணங்களால் நட்பில் விரிசல் வரலாம்.

**கடகம்** கருத்து வேறுபாடு தீர நீங்கள் முயன்றால் அதற்கு வாய்ப்புள்ளது மூத்தவர்களை அனுசரித்து நடந்து கொண்டு ஆசி பெறுவீர்கள். புதிய நட்புகளை நம்பிப் பெரிய முடிவுகளை எடுக்க வேண்டாம்.

**சிம்மம்** பணியிடத்தில் கருத்து வேறுபாடு தோன்றாதபடி அனுசரித்து செல்லுங்கள். சற்று அதிகமாக உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும். அனுபவசாலிகளின் ஆலோசனைப்படி நடப்பது மிகவும் அவசியம்.

**கன்னி** விலை உயர்ந்த ஆபரணங்கள் விஷயத்தில் கவனமாக இருங்கள். அலுவலக நண்பர்களின் உதவியால் உங்கள் நிலை சற்று உயரும். நல்லவர்களை அடையாளம் காண்பீர்கள். நிம்மதியான நாள்.

**துலாம்** பெற்றோருடைய உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். ஆசிரியர் பணியில் உள்ளவர்களை மதித்து நடக்கவேண்டும்.கருணை அதிகரிக்கும். கவர்ச்சி அம்சம் கூடுதலாகும்.

**விருச்சிகம்** யாரையும் எக்காரணம் கொண்டும் அலட்சியமாக நடத்த வேண்டாம். பொருட்களைப் பாதுகாப்பதில் கூடுதல் கவனத்துடன் இருக்கவும். நல்ல விஷயங்கள் நடைபெறுவதற்கான அடையாளம் தெரியும்.

**தனுசு** அனுபவசாலிகளின் உதவி ஒன்று கிடைக்கும். கஷ்டம் தீரும். எதிர்பார்த்த விஷயங்கள் நடைபெறாமல் பதற்றம் ஏற்படலாம். எதிர்பார்த்த கூடுதல் வருமானம் கிடைப்பதில் தாமதம் உண்டு.

**மகரம்** இன்று முக்கியப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். மற்றவர் குறைகளைப் பக்குவமாக சுட்டிக் காட்டுங்கள். எதிலும் கவனம் தேவை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**கும்பம்** இயந்திரம் இயக்கும்போது அதிகக் கவனத்துடன் இருங்கள். சமூக வலைதளங்களில் அறிமுகமாகும் நபர்களிடம் கவனம் தேவை. கூட்டுத் தொழில் செய்பவர்கள் பார்ட்னரை நம்பலாம்.

**மீனம்** அக்கம்பக்கத்தினரிடம் பேசும்போது கடுமை காட்ட வேண்டாம். பிறரால் பாராட்டப்படுவீர்கள். பெற்றோர் ஆதரவாகச் செயல்படுவர். பணிச்சுமை அதிகரித்தாலும் ஈடுபாட்டுடன் வேலை பார்ப்பீர்கள்.

# திருச்சி சிறப்பு முகாமில் இருந்த மட்டக்களப்பு வாசி உயிரிழப்பு!

சென்னை, ஜுன் 26,

திருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுகவீனமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மரணமானார். உயிரிழந்த கைதிக்கு சக கைதிகள் அஞ்சலி செலுத்தியுள்ளனர். மரணமான கைதி வழக்கு முடிந்தும் 4 மாதங்களாக விடுவிக்கப் படாமல் தடுப்புக்காவலில் இருந்தாவன சிறப்பு முகாம் வாசிகள் குற்றச்சாட்டியுள்ளனர்.

மரணமானவர் இலங்கை கிழக்கு மாகாணம் மட்டகளப்பு பகுதியைச் சேர்ந்த, முகமது அலி. மார்க்சிய சிந்தனையாளர், எழுத்தாளர். பல்வேறு புத்தகங்களையும் எழுதியுள்ளார். இலக்கிய ஆர்வம் உள்ளவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 78 பேர் கடந்த 9 ஆம் திகதி முதல் 17 நாட்களாக தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர். தங்களை பொய் வழக்கில் கைது செய்துள்ளனர். அந்த வழக்கிலும் தண்டணைக் காலம் முடிந்தும் சிறையில் அடைத்துள்ளனர். பிணை கிடைத்தாலும் வேறு வழக்கில் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர். எனவே, சட்டப்படி விடுதலை செய்ய வேண்டும். இல்லையென்றால் கருணைக்



கொலை செய்து விடுங்கள் என்று கோரி போராட்டம் நடத்திவருகின்றனர்.

போராட்டத்திலும் இலங்கை மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த முகமது அலியும் பங்கேற்றார். கடந்த 19 ஆம் திகதி உடல் நலக்குறைவால் திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி புதன்கிழமை உயிரிழந்தார். இவர், இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக இந்தியா வந்ததாக இராமநாதபுரத்தில் கைது செய்யப்பட்டார். வழக்கு முடிந்தும் 4 மாதங்களாக விடுவிக்கப்படாமல் இருந்தார் என சிறப்பு முகாம் வாசிகள் குற்றச்சாட்டியுள்ளனர்.

# மக்கள் நீதி மய்யத்தின் அடுத்த கட்ட பயணம்



## கமல்ஹாசன் இன்று முக்கிய அறிவிப்பு

சென்னை, ஜுன் 26,

மக்கள் நீதி மய்யம் கட்சியின் இணைய வழி கலந்துரையாடல் கூட்டம் இன்று காலை 11.00 மணிக்கு நடைபெற இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் மவுரியா அறிவிப்பு வெளியிட்டுள்ளார். கட்சியின் அடுத்த கட்ட பயணம் குறித்து இதன்போது கட்சித் தலைவர் கமல்ஹாசன் அறிவிக்கவுள்ளார்.

சட்டமன்றத் தேர்தலில் படுதோல்வியை மய்யம் சந்தித்திருக்கும் நிலையில், கமல்ஹாசன் கடந்த சில நாட்களாகவே நிர்வாகிகளுடன் தனித்தனியாக அவர் ஆலோசனை நடத்தினார். அப்போது தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு தோல்வி ஏற்பட்டது ஏன் என்பது பற்றி நிர்வாகிகளிடம் பல்வேறு கேள்விகளை கேட்டார்.

இதற்கு அவர்கள் அளித்த பதில்களை குறித்து வைத்து கொண்ட கமல், கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை இன்று அதிரடியாக தொடங்குகிறார். மக்கள் நீதி மய்யம் கட்சியின் இணைய வழி கலந்துரையாடல் கூட்டம் இன்று காலை 11.00 மணிக்கு நடைபெற இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் மவுரியா அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அதில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளின் ஆரோக்கியமும், பாதுகாப்பும், மக்கள் நீதி மய்யத்தின் அடுத்த கட்ட பயணம், கட்சிக் கட்டமைப்பினை வலுப்படுத்துதல், புதிய நிர்வாகிகள் அறிவிப்பு, உள்ளாட்சித் தேர்தலுக்கு தயாராகுதல் ஆகிய 5 முக்கிய விஷயங்கள் பற்றி கமல் கட்சி நிர்வாகிகளுடன் பேச இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் கட்சியினர் அனைவரும் இணைய வழியின் வாயிலாக பங்கேற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற உள்ள கூட்டத்தில் கட்சிக்கு புதிய நிர்வாகிகளை கமல்ஹாசன் அறிவிக்கிறார். மக்கள் நீதி மய்யம் கட்சியில் இருந்து தேர்தல் தோல்விக்கு பிறகு முக்கிய நிர்வாகிகள் பலர் விலகினர். அந்த பதவிகளுக்கு புதிதாக நிர்வாகிகள் நியமிக்கப்பட உள்ளனர். இது தவிர மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் நிர்வாகிகள் பட்டியல் தயாராக உள்ளது. அதனை கமல்ஹாசன் இன்று வெளியிடுகிறார்.

# என் தலைமையில் செயல்பட்டிருந்தால் அ.தி.மு.க. ஆட்சியைப் பிடித்திருக்கலாம்

## சசிகலா சொல்கிறார்

சென்னை, ஜுன் 26,

அ.தி.மு.க. என் தலைமையில் ஒற்றுமையாக செயல்பட்டிருந்தால் மீண்டும் ஆட்சியை பிடித்திருக்க முடியும் என்று சசிகலா தெரிவித்திருக்கின்றார். இந்த நிலையில் சசிகலாவுடன் பேசிய மேலும் 5 அ.தி.மு.க. தொண்டர்களை கட்சித் தலைமை அதிரடியாக நீக்கியுள்ளது.



சசிகலா தொண்டர்களுடன் தொலைபேசியில் தினந்தோறும் பேசி வருகிறார். அந்த வகையில் ஈரோட்டை சேர்ந்த சிதம்பரம் என்ற தொண்டரிடம் சசிகலா பேசுகையில், “கொரோனா தாக்கம் முழுசா ஓயட்டும். கட்டாயம் நான் வந்துருவேன். கட்சியே இப்போ வேற மாதிரி போய்க்கிட்டு இருக்கு. விரைவில் வந்து இந்த கட்சியை காப்பாற்றுவேன்.

“அம்மா இருக்கும்போது நம்ம கட்சி நாட்டிலேயே 3ஆவது பெரிய கட்சினு நமக்கு அந்தஸ்து கிடைச்சது. ஆனா இன்னைக்கு நம்ம எம்.பி.க்களை நாமே இழந்திருக்கிறோம். இருந்த எம்.பி.க்களையும், அவங்களோட தவறான முடிவுகளால் வேற கட்சிக்கு தாரை வார்த்திருக்கிறோம். எந்த பிரச்னையும் ஏற்படாம என்னோட தலைமையில ஒற்றுமையாக இருந்துருந்தா நிச்சயம் ஆட்சி அமைச்சிருக்கலாம்” என சசிகலா பேசினார்.

இந்நிலையில், சசிகலாவுடன் தொலைபேசியில் பேசிய அ.தி.மு.க. நிர்வாகிகள் 5 பேரை கட்சியில் இருந்து நீக்கி, எடப்பாடி பழனிசாமி - ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுகுறித்து அக்கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, ஒருங்கிணைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவருமான ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கூட்டாக அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.

# யாழ்.மாநகர சபை அமர்வில் 'நாய்' என விளித்த உறுப்பினருக்கு ஒரு மாத தடை

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்.மாநகர சபை அமர்வில் "நாய்" எனும் சொல்லைப் பிரயோகித்தமைக்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரியாலை வட்டார உறுப்பினர் ரஜீவ்காந்த் சபை அமர்வில் கலந்துகொள்ள ஒரு மாத காலத்துக்கு முதல்வர் தடை விதித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது மாநகர சபையில் இருந்து ஆவணம் ஒன்று திருடப்பட்டு சபை உறுப்பினர் ரஜீவ்காந்தின் உத்தியோகபூர்வ முகநூலில் பதிவேற்றப்பட்டு இருந்தது.

அந்தக் கடிதம் எவ்வாறு உறுப்பினர் கைக்கு கிடைத்தது என்பது தொடர்பில் விளக்கமளிக்கவேண்டும் எனவும், தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முதல்வரினால் உறுப்பினருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் நேற்றைய அமர்வில் குறித்த விடயம் தொடர்பில் விவாதம் எழுந்தது. இதன்போது சக உறுப்பினரான பார்த்தீபனுடன் வாக்குவாதம் எழுந்திருந்தது.

இதன்போது உறுப்பினர் ரஜீவ்காந்த், சக உறுப்பினரான வ.பார்த்தீபனை நோக்கி "நாய்" என விளித்து பேசியிருந்தார்.

அதனால் சபையில் அநாகரிகமான முறையில் சொல் பிரயோகங்களை பாவித்தமைக்காக சபையில் மன்னிப்புகோரி, குறித்த சொற்பிரயோகங்களை மீள பெறுமாறு இரு உறுப்பினர்களையும் முதல்வர் கேட்டுக்கொண்டார்.

அதனை அடுத்து உறுப்பினர் வ.பார்த்தீபன் மன்னிப்புகோரி, தவறான, அநாகரிகமான சொற்பிரயோகங்களை பாவித்திருந்தால் அவற்றை மீளப் பெறுகிறேன் என சபையில் தெரிவித்தார்.

ஆனாலும், அவருடன் வாக்குவாதப்பட்டு " நாய்" என விளித்த உறுப்பினர் ரஜீவ்காந்த் தான் சபையில் மன்னிப்பு கோரமாட்டேன் எனவும், அநாகரிகமான சொற்களை மீளப் பெறமாட்டேன் எனவும் கூறினார்.

இதனால் அவரை சபை நடவடிக்கையில் இருந்து ஒரு மாத காலத்துக்கு இடைநீக்க முடிவெடுக்கப்பட்டது.

அந்த முடிவுக்கு சபையில் 23 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர். அவருடன் வாக்குவாதப்பட்ட சக உறுப்பினரான வ.பார்த்தீபன் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்திருந்தனர். தன்னை சபை நடவடிக்கையில் இருந்து நீக்கக்கூடாது என ரஜீவ்காந்தும் மற்றுமோர் உறுப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் தீர்மானத்திற்கு அமைவாக ரஜீவ்காந்த் சபை நடவடிக்கையில் ஒருமாத காலத்திற்கு ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ-03)

# வவுனியாவில் மரணித்த சிறுமியின் சடலத்துக்கு 'சீல்'

வவுனியா, ஜூன் 26

வவுனியா பொது வைத்திய சாலையில் மரணித்த சிறுமி ஒருவரின் சடலம் வைத்திய சாலையால் 'சீல்' வைக்கப்பட்டமைக்கு வைத்தியசாலை நிர்வாகம் மீது உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ள நிலையில் சிறுமியின் நோய்க் காரணிகளை அடிப்படையாக வைத்தே சடலம் 'சீல்' வைக்கப்பட்டதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக தெரியவருவதாவது,

பூணாவ பிரபோதகம கிராமத்தை சேர்ந்த 15 வயது சிறுமிக்கு கடந்த புதன்கிழமை திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதை அடுத்து வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

இந் நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சடலத்துக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிக்கப்பட்ட நிலையில் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை கொரோனா தொற்று இல்லை என கிடைக்கப்பெற்ற நிலையில் சடலத்தை பொறுப்பேற்க சென்ற உறவினர்களிடம் சடலத்தை திறக்க முடியாதவாறு 'சீல்' செய்து வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக உறவினர்கள் கருத்து தெரிவிக்கையில்,

சடலத்தை பிரேத அறையில் வைத்திருந்தபோது குளிரூட்டி செயல்படாமையால் சடலம் பழுதடைந்துள்ளது. இறுதியில் பிள்ளையின் முகத்தை கூட பார்க்க முடியாதவாறு செய்து விட்டனர் என தெரிவித்தனர்.

எனினும் இவ் விடயம் தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளரிடம் கேட்டபோது,

சிறுமியின் மரணம் தொடர்பில் முழுமையான அவதானத்தை செலுத்தியிருந்தேன்.

பி.சி.ஆர் அறிக்கை கொரோனா தொற்று இல்லை என்றே தெரிவித்திருந்தது. எனினும், அவரது நோய் நிலைகளை கேட்டதன் அடிப்படையில் அவரின் மரணம் தொடர்பில் சந்தேகம் எழுந்தது. இவ்வாறான நிலையில் சமூக பாதுகாப்பை கருத்தில் கொண்டு சடலம் 'சீல்' வைத்து வழங்கப்பட்டது.

இதேவேளை வவுனியா பொது வைத்தியசாலையின் பிரேத அறையின் அனைத்து குளிரூட்டி வசதிகளும் சிறப்பாக இயங்குகின்றன-என்றார்.

# உயர்கல்வி கட்டமைப்பை அரசு இராணுவமயமாக்க நடவடிக்கை

## கலாநிதி ஹரினி அமரசூரிய குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூன் 26**

**கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம் தொடர்பான சட்டமூலத்தின் ஊடாக உயர்கல்வி கட்டமைப்பை இராணுவமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.**

இராணுவத்தினரால் சிவில் பிரஜைகளுக்கு உயர் கல்வியை வழங்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இது முழு சமூகத்தையும் இராணுவமயப்படுத்தக்கூடிய பாரதூரமானதொரு செயல்பாடாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம் தொடர்பான சட்டமூலம் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு ரணில் - மைத்திரி ஆட்சியிலேயே இந்த சட்டமூலம் முதன்முதலாக கொண்டுவரப்பட்டது. எனினும் அந்த சந்தர்ப்பத்தில் இதற்கு கடும் எதிர்ப்பு வெளியானதால் குறித்த சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது இந்த அரசாங்கம் குறித்த மூலத்தை மீண்டும் கொண்டு வந்துள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் பாரிய பிரச்சனைகளுக்கு மத்தியில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான சட்டமூலம் எதற்காக அவசரமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து மக்கள் அவதானம் செலுத்த வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக அதற்கு சமமான உயர் கல்வி நிர்வாக பொறிமுறையொன்றை முப்படையினரின் நிர்வாகத்தின் கீழ் உருவாக்குவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சட்டமூலம் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் தொடர்புடையது மாத்திரமல்ல. ஏனைய பல் கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கும், ஏனைய உயர்கல்வி பட்டப்படிப்புக்கான நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதற்கும், நாடளாவிய ரீதியில் உயர் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கும், பாடசாலைகளை நிர்வகிப்பதற்கும் இதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் கிடைக்கப்பெறும். இவ் அனைத்தும் இராணுவம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் வகையிலேயே ஸ்தாபிக்கப்படும்.

இதன் மூலம் உயர்கல்வி இராணுமயப்படுத்தப்படும். உலகில் எந்தவொரு இடத்திலும் உயர் கல்வி இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதில்லை. இராணுவப் பயிற்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய கல்வி செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு தனிப்பட்ட நிர்வாகம் காணப்படுவதில் எவ்வித சிக்கலும் இல்லை. ஆனால், இராணுவத்தினரால் சிவில் பிரஜைகளுக்கு உயர் கல்வியை வழங்குவதற்கு தயாராகின்றமையில் பல பிரச்னைகள் உள்ளன. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இதன் மூலம் கல்வி சிதைவடையும். சமூகம் இராணுவமயப்படுத்தப்படும். உயர் கல்வி மூலம் நாம் எதிர்பார்க்கும் இலக்குகளை ஒருபோதும் எட்ட முடியாது. அதே போன்று இந்த சட்டமூலத்தின் ஊடாக அரச நிதியில் தனியார் பல்கலைக்கழக கட்டமைப்பை அரசின் தலையீட்டுடன் நடத்திச் செல்லவும் முயற்சிக்கின்றனர்.

அரச நிதியையும் உபயோகித்து, கொத்தலாவலை உள்ளிட்ட பல்கலைக்கழகங்களை பணம் சேகரிக்கும் பல்கலைக்கழக கட்டமைப்பாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதாவது இது வரையில் நாட்டில் காணப்படுகின்ற சுதந்திரமாக கல்வி நிர்வாகத்திற்கு முரணான உயர்கல்வி வியூகம் இதன் மூலம் உருவாக்கப்படுகிறது.

எனவே இதனை உடனடியாக கைவிடுமாறு வலியுறுத்துகின்றோம். நாட்டில் தற்போது காணப்படுகின்ற பிரச்னைகளுக்கு மத்தியில் இதனை செய்யாமல் இருக்குமாறு கோருகின்றோம்.

கொத்தலாவலை பல்கலைக்கழகத்தை இராணுவ பயிற்சி அல்லது அதனுடன் தொடர்புடைய கற்பித்தலுக்காக பயன்படுத்துவதில் எவ்வித சிக்கலும் இல்லை.

ஆனால், இராணுவத்தினரால் பிஜைகளுக்கு இராணுவம் அல்லாதோருக்கு கற்பிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. உயர்கல்வி கட்டமைப்பை இவ்வாறு இராணுவமயப்படுத்த முயற்சிப்பது மிகப் பாரதூரமானதாகும். இது அரச சேவை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தாக்கம் செலுத்தும். எனவே சகலரும் இதற்கு எதிர்ப்பை தெரிவிக்கவேண்டும்-என்றார்.

# 260 தூக்குத்தண்டனை கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைப்பதற்கு பரிந்துரை

கொழும்பு, ஜூன் 26

260 தூக்குத் தண்டனை கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கான பரிந்துரைப் பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தெரிவித்தார்.

தூக்குத் தண்டனை கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றப்படவேண்டும் வலியுறுத்தி மகர சிறைச்சாலையின் கைதிகள் குழு நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

அவர்களது போராட்டத்துக்கு ஆதரவாக வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகள் நேற்று கூரை மேல் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையிலேயே 260 தூக்குத் தண்டனை கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கான பரிந்துரைப் பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தெரிவித்தார்.

# சேதன, இரசாயன உரங்கள் இறக்குமதி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 26

சேதன, இரசாயன உரங்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி வீரக்கோன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் விவசாயிகள் சேதன உர உற்பத்தியில் கவனம் செலுத்துவதை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# கஞ்சா கடத்திய இரண்டு பேர் பசறையில் மடக்கிப்பிடிப்பு!

கொழும்பு, ஜுன் 26

ஓட்டோவில் கஞ்சா கடத்தலில் இருவரை பசறைப் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

ஓட்டோவொன்றில் கஞ்சா போதைப்பொருள் கடத்தப்படுவதாக பசறை பொலிஸாருக்கு இரகசிய தகவலொன்று கிடைத் துள்ளது.

இதனையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் ஆலோசனையின் பிரகாரம் உதவி பொலிஸ் அதிகாரி இஷார தலைமையிலான குழுவினர் சுற்றிவளைப்பு நடவடிக்கைக்கு அனுப்பட்டனர்.

கமேவெலயிலிருந்து பசறை நோக்கி வந்துகொண்டிருந்த குறித்த ஓட்டோவை, வீதி சோதனை சாவடிக்கருகில் சென்று வழிமறித்து சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது ஓட்டோவில் இருந்த இளைஞர்கள் இருவரிடமிருந்தும் 5 கிராம் கஞ்சா போதைப்பொருளும் 17 ஆயிரம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டுள்ளது. 29, 30 வயதுகளையுடைய இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

*வடமராட்சியில் 23 கோடி ரூபாய் செலவில்*

# சேதன குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை நிர்மாணிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 26

வடமராட்சி முள்ளியில் சுமார் 23 கோடி ரூபாய் பெறுமதியான சேதன குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை திறந்து வைக்கப்படவுள்ளது.

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் உதவி மூலம் உருவாக்கப்பட்ட இந்த தொழிற்சாலையால் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் கிலோ உரத்தை உருவாக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி பிரதேச சபையின் ஆளுகைக்குள் காணப்படும் இந்த தொழிற்சாலை மூலம் பிரதேச சபைகளின் குப்பைப் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் 9 மாகாணத்துக்கும் ஒவ்வொரு திட்டம் வழங்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாணத்துக்கான திட்டம் கரவெட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைபிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர். (அ-02)

# தடுப்பூசி ஏற்றிய ஆடை ஆலை ஊழியர் 63 பேருக்கு திடீரென உடல்நலக் குறைவு!

*கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதி*



**கிளிநொச்சி, ஜுன் 26**

**கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்ட கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் பலருக்கு, திடீர் உடல் நலப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு, கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இவ்வாறு தடுப்பூசியை பெற்றுக்கொண்ட 63 பேருக்கு நேற்றுக் காலை, திடீர் உடல் நலப் பாதிப்பு ஏற்பட்டமையால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள தனியார் ஆடைத்தொழிற்சாலைகள் இரண்டிலும் சுமார் 3,000 பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு தொகுதியினருக்கு நேற்று முன் தினம் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இந்நிலையில், அவர்களில் 63 பேர் திடீர் உடல் நலப் பாதிப்புக்கு உள்ளாகி நேற்றுக் காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று காலை தொழிற்சாலைக்கு வருகை தந்த இந்த ஊழியர்களுக்கு சுகயீனம் ஏற்பட்டமையால் தொழிற்சாலை பஸ் மற்றும் வாகனங்களில் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும், குறித்த நோயாளர்களில் அபாயகரமான தாக்கத்தில் இதுவரை எவரும் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேநேரம், கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு இரண்டாவது கட்ட தடுப்பூசி செலுத்தும் பணிகளும் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்டன. (அ)

# முல்லைத்தீவில் மர்மப்பொருள் வெடித்தமையால் ஒருவர் காயம்!

முல்லைத்தீவு, ஜுன் 26

முல்லைத்தீவில் கத்தோலிக்கத் திருச்சபைக்குச் சொந்தமான சுவாமி தோட்டத்தில் மர்மப் பொருள் வெடித்ததில் ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 03 மணியளவில் அந்த காணியில் குப்பைக்கு தீ வைத்தபோதே குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்தக் காணியில் மேற்பார்வையாளராக பணியாற்றும் 55 வயதுடைய நேசன் என்பரே கழுத்தில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# துமிந்தவின் விடுதலைக்கு எதிர்ப்பு; கைதிகள் பலர் உண்ணாவிரதம்!

கொழும்பு, ஜுன் 26

துமிந்த சில்வாவுக்கு, விசேட தேர்ந்தெடுப்பின் அடிப்படையில் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறைக் கைதிகள் பலர் உண்ணவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மஹர, வெலிக்கடை மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் உள்ள தண்டனை கைதிகள் பலரே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கான காரணம் மிகவும் நியாயமானது என இது தொடர்பில் கருத்து தெரிவித்த சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்தார்.

துமிந்த சில்வாவை விட பொதுமன்னிப்பு பெற தகுதியான பல கைதிகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் பலமுறை பொது மன்னிப்புக்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாகவும் சட்டத்தரணி சேனக பெரேரா சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான நிலையிலேயே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



இது தொடர்பில் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்கவிடம் வினவியபோது, மஹர மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளிலுள்ள சில கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதை உறுதி செய்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சில கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். தங்களுக்கான மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக தளர்த்துமாறு கோரி கைதிகள் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அவர் கூறினார்.

கடந்த காலங்களில் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பில், அரசமைப்பு ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும், அரசமைப்பின் 34 ஆவது உறுப்புரை பிரகாரம் பொதுமன்னிப்பளிப்பது தொடர்பில் உறுதியான கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவது தொடர்பில் தமது சங்கம் ஊடாக கருத்தாடல் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சட்டத்தரணி சேனக பெரேரா குறிப்பிட்டார்.

# காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, ஜுன் 26

மட்டக்களப்பு-மரப்பாலம் பிரசேத்தில் காட்டு யானை தாக்கியதில்தொழிலாளி ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

இலுப்படிச்சேனை பகுதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான 61 வயதுடைய வண்ணமணி கிருஷ்ணகுமார் என்பவரே உயிரிழந்தார் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

நெல் பயிர்ப்பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தவேளை வயலிற்குள் நுழைந்த யானை காவலாளியைத் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாக விவசாயிகள் முறையிடுகின்றனர்.

முறையான யானை வேலி அமைப்பதன் மூலமே விவசாயிகளின் உயிரிகளையும் பயிர்களையும் பாதுகாக்க முடியுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மக்களை கண்காணிக்க மன்னாரில் புதிய குழு

மன்னார், ஜுன் 26

மக்கள் சுகாதார நடைமுறைகளை முறையாக கடைப்பிடிக்கின்றார்களா என்பதை அவதானிக்க குழுவொன்று மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களைக் கொண்ட இந்தக் குழு உறுப்பினர்களுக்கு, பாதுகாப்பு உடைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்கும் செயல்பாட்டை முன்னெடுக்க ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் பொது சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் றோய் பீரிஸ் தலைமையில் இந்த பணியாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் நேற்றுக் காலை 10.30 மணியளவில், மன்னார் பஸ் தரிப்பிட பகுதியில்தமது பணியை இவர்கள் முன்னெடுத்தனர்.

மேலும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் குறித்த இளைஞர் குழுவினரால் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு



# மன்னாரில் 2 நாளில் 80 பேருக்கு தொற்று

## தலைமன்னாரில் 2 கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டன

மன்னார், ஜூன் 26

**தலைமன்னார் பியர் பகுதியில் 62 பேர் நேற்று மாலை வரை கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், தலைமன்னார் பியர் மேற்கு மற்றும் தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளும் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்கள் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின்போது மேலும், புதிதாக 80 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்கள் மட்டும் புதிதாக 80 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து இம்மாதம் தற்போது வரை 252 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தற்போது வரை 759 தொற்றாளர்கள் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது அடையாளம் காணப்பட்டவர்களில் 29 பேர் தலைமன்னார் பியர் பகுதியில் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பை கொண்டவர்களாகவும், ஒருவர் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தராகவும் உள்ளனர்.

மேலும் 2 பேர் தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்தவராகவும்,25 பேர் நடுக்குடா பகுதியில் உள்ள கடல் உணவு பதனிடும் தொழிற்சாலையில் பணியாற்றுகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும், மன்னார் நகரப் பகுதியில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புடைய 14பேரும், மேலும், ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரை தலைமன்னார் பியர் பகுதியில் 62 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் பியர் மேற்கு மற்றும் தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளும் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதியில் எடுக்கப்பட்ட பி.சி.ஆர்.மாதிரிகள் கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மரபணு பகுப்பாய்வு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு தொற்று ஏற்பட்ட வைரஸ் புதிதாக திரிபடைந்த வைரஸின் ஏதாவது ஒன்றா?என்ற முடிவுகள் ஒரு வாரத்தில் கிடைக்கப் பெறும் என எதிர் பார்க்கின்றோம். தற்போது நூறு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொண்டால் 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்படுகின்றது.

இது அபாயகரமான நிலமையாகும். எனவே மக்கள் இதனை உணர்ந்து பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டாலும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தேவை இன்றி வீடுகளில் இருந்து வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும்.

கடந்த வியாழக்கிழமை மன்னாரில் சமூக தடுப்பூசி வழங்கும் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டது.முதல் கட்டமாக மன்னாரில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றுகின்ற 494 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

எஞ்சிய நபர்களுக்கும், நடுக்குடா பகுதியில் உள்ள கடல் உணவு பதனிடும் தொழிற்சாலையில் பணியாற்றுகின்றவர்களுக்கும் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இது வரை 5 கொரோனா மரணம் நிகழ்ந்துள்ளது. மூன்று தினங்களுக்கு முன்னர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 71 வயதுடைய பெண் ஒருவர் கொரோனாவினால் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சலினால் உயிரிழந்தார்-என்றார்.




# இலங்கைக்கு அப்பால் மற்றொரு கொள்கலன் கப்பலில் தீ விபத்து!

## இந்திய கப்பல், விமானங்கள் விரைவு

கொழும்பு, ஜூன் 26

இலங்கை மற்றும் மலாக்கா ஜலசந்திக்கு இடையே இந்தியப் பெருங்கடலில் எஸ்.சி. மெசினா என்ற கொள்கலன் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில் தீயணைப்புப் பணிகளுக்காக அந்தப் பகுதிக்கு இந்திய கடலோர காவல்படை கப்பல் மற்றும் விமானங்கள் சென்றுள்ளன.

இலங்கை நேரப்படி நேற்று காலை எஸ்.சி. மெசினா கொள்கலன் கப்பலின் இயந்திரப் பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டது.

தீப்பரவல் ஏற்பட்டுள்ள இந்தக் கப்பலில் 28 பணியாளர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் காணாமல் போயுள்ளாரெனத் தெரியவந்துள்ளதாக இந்திய கடலோர காவல் படை வெளியிட்ட ருவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு கட்டப்பட்டு லைபீரியா கொடியுடன் செயல்பட்டுவரும் இந்தக் கப்பல் கொழும்பில் இருந்து சிங்கப்பூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த நிலையிலேயே இயந்திரப் பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

## அம்புலன்ஸ் விபத்து;

# காயமடைந்த 4 பேரில் ஒருவருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூன் 26

ஹக்மன-வலஸ்முல்ல பிரதான வீதியின் தெனகம பகுதியில் நேற்று காலைஅம்புலன்ஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த சுகாதார ஊழியர்கள் நால்வர் காயமடைந்துள்ளனர்.

வலஸ்முல்ல வைத்தியசாலையின் அம்புலன்ஸ் ஒன்றே இவ்வாறு மதிலுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த நால்வர் வலஸ்முல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, காயமடைந்த நால்வருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் அவர்களில் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள ஹக்மன பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

# வாசுதேவ மருத்துவமனையில்!

கொழும்பு, ஜூன் 26

நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாரடைப்புக்கு சிகிச்சை பெறுவதற்காக அவர் இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு,"ஸ்டென்ட்"அறுவைச் சிகிச்சை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலை தற்காலிகமாக ஏற்பட்ட விடயம் அல்லவென வும், மருத்துவ ஆலோசனைக்கு அமைவாக முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நிகழ் வென்றும் அமைச்சரின் செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்டார்.

# மன்னார் ஆடை ஆலை ஊழியர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுப்பு

மன்னார், ஜூன் 26

மன்னார் மாவட்டத்தில் சமூக மட்டத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் முகமாக மக்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயல்திட்டத்தின் முதற் கட்டமாக மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசி நேற்று வெள்ளிக்கிழமை இரண்டாம் கட்டமாக செலுத்துப்பட்டது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் பொது சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனை இணைந்து மருத்துவர் றோய் பீரிஸ் மற்றும் வைத்தியர் கே. சுதாகர் தலைமையில் நேற்று ஆடைத் தொழிற்சாலையில் மேற்படி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

மன்னார் தள்ளாடி 54 படைப்பிரிவை சேர்ந்த இராணுவத்தின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் 494 பேருக்கும் நேற்று இரண்டாம் பகுதியினருக்கும் தடுப்பூசி வழங்கும் செயல்பாடு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதிக்கு அவசரமாக கடிதம் எழுதிய ஹிருணிகா!

கொழும்பு, ஜூன் 26

மரண தண்டனைக் கைதி துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியமை நாட்டின் சட்டத்துக்கு அவமரியாதை என தெரிவித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஹிருணிகா பிரேமச்சந்திர கடிதம் அனுப்பியுள்ளார்.

பௌத்த மதத்தின்படி, துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், நாட்டின் தற்போதைய சட்டத்தை நிலைநிறுத்துவது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகளின் தீர்ப்பை குப்பையில் எறிந்து இறுதி முடிவை எடுப்பவர் நீங்கள் என்றால், இந்த நாட்டின் சட்டம் என்ன?" என்று அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் எழுதியுள்ளார்.

ஜனாதிபதி ஒரு சிலரின் கைகளில் சிப்பாயாக மாறிவிட்டார் என்று அவர் குறிப்பிட்டுள்ளதுடன்,துமிந்த சில்வாஅடுத்த தேர்தலில் வெற்றி பெற்றாலோ அல்லது அரசியலில் நுழைந்தாலோ ஆச்சரியப்படமாட்டேன் என்றும், மக்கள் அநீதிகளை உடைக்கும் நாள் வெகு தொலைவில் இருக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

- பிரியா-நடேஸ் குடும்பம் தடுப்புமுகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்காலிகமாக பெர்த்தில் வாழ அனுமதிக்கப்பட்டுள்ளது.
- குடிவரவு அமைச்சர் Alex Hawke தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இக்குடும்பம் தற்போதைக்கு தடுப்புமுகாமைவிட்டு வெளியே வாழ்வதற்கு அனுமதித்துள்ளார்.
- குழந்தை தருணிகா சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை அடிப்படையாக வைத்து முழுக்குடும்பமும் நாடுகடத்தலுக்கெதிராக தொடர்ந்தும் சட்டப்போராட்டத்தை மேற்கொண்டுவருகிறது.




# அவுஸ்திரேலிய அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தமிழ் குடும்பம்

அவுஸ்திரேலியாவில் புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்களான பிரியா-நடேஸ் தம்பதியரின் இரு மகள்களான கோபிகா மற்றும் தருணிகாவுக்கு Jane மற்றும் Sally என்ற பெயர்கள் இருந்திருந்தால் அவுஸ்திரேலிய அரசு அவர்களை வேறுவிதமாக நடத்தியிருக்கும் என எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட விமர்சனத்தை குடிவரவு அமைச்சர் நிராகரித்துள்ளார்.

அவுஸ்திரேலிய தேசியக் கட்சியின் தலைவராகவும் துணைப் பிரதமராகவும் மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னதாக கருத்துவெளியிட்ட Barnaby Joyce, பிரியா குடும்பத்தை அரசு நடத்தும் விதம் தொடர்பில் விமர்சனத்தை வெளியிட்டதுடன், அவுஸ்திரேலியாவில் பிறந்த இரு பெண் குழந்தைகளுக்கும் Jane மற்றும் Sally என்ற பெயர்கள் இருந்திருந்தால் அவர்களை வேறொரு நாட்டிற்கு அனுப்புவதற்கு அரசு முனைந்திருக்காது என சாடியிருந்தார்.

ஆனால் Barnaby Joyce-இன் கருத்து நியாயமற்றது எனவும் தவறானது எனவும் குடிவரவு அமைச்சர் Alex Hawke தெரிவித்துள்ளார். தானும் அவுஸ்திரேலிய அரசும் இக்கருத்தினை மறுப்பதாக SBS-க்கு வழங்கிய நேர்காணலில் அவர் தெரிவித்தார்.

ஒருவரது பெயரோ, அல்லது அவர்கள் எந்த இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதோ, எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதோ பொருட்டில்லை எனவும், அவர்களுக்கு அவுஸ்திரேலிய அரசு பாதுகாப்பு வழங்க வேண்டுமா இல்லையா என்பதற்கே தாம் கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் Alex Hawke தெரிவித்தார்.

**3 மாத கால விசா**

இதுஒருபுறமிருக்க பெர்த்தில் சமூகத் தடுப்பில் (Community detention) வாழ்ந்துவரும் பிரியா, நடேஸ் மற்றும் கோபிகா ஆகிய மூவருக்கும் 3 மாதங்களுக்கான bridging வீசா புதன்கிழமை குடிவரவு அமைச்சர் Alex Hawke- ஆல் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசி மகள் தருணிகாவுக்கு bridging வீசா வழங்கப்படவில்லை.

> **“தருணிகா தொடர்ந்தும் சமூக தடுப்பு உத்தரவின்கீழே உள்ளதால் அவர் பெர்த்தைவிட்டு வேறு எங்கும் செல்ல முடியாது. இதனால் முழுக்குடும்பமும் பெர்த் சமூகத் தடுப்பிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இக்குடும்பத்தினரின் சட்டத்தரணி தெரிவித்தார்.”**

குறித்த bridging வீசாவின்கீழ் பிரியா, நடேஸ் மற்றும் கோபிகா ஆகிய மூவரும், அவர்கள் முன்பு வாழ்ந்துவந்த குயின்ஸ்லாந்தின் Biloela பகுதிக்கு சென்று வாழமுடியும்.

ஆனால், தருணிகா தொடர்ந்தும் சமூக தடுப்பு உத்தரவின்கீழே உள்ளதால் அவர் பெர்த்தைவிட்டு வேறு எங்கும் செல்ல முடியாது. இதனால் முழுக் குடும்பமும் பெர்த் சமூகத்தடுப்பிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இக்குடும்பத்தினரின் சட்டத்தரணி Carina Ford தெரிவித்துள்ளார்.

குடும்பத்தில் மூவருக்கு மாத்திரம் bridging வீசா வழங்கிவிட்டு தருணிகாவுக்கு மட்டும் வீசா வழங்காததற்கு என்ன காரணம் என்பதை குடிவரவு அமைச்சர் விளக்கவேண்டும் எனவும் Carina Ford கூறியுள்ளார்.

பிரியா குடும்பம் அவர்கள் முன்னர் வாழ்ந்த Biloela-இல் வாழ அனுமதிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக போராடி வரும் பின்னணியில், அமைச்சரின் நடவடிக்கையால் இக்குடும்பம் அங்கு செல்லமுடியாமல் பெர்த்திலேயே இருக்க வேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக Carina Ford குறிப்பிட்டார்.

நான்கு வயது தருணிகாவுக்கு குருதித்தொற்று ஏற்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் கிறிஸ்மஸ் தீவிலிருந்து பெர்த்திற்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து குடிவரவு அமைச்சரின் விசேட அனுமதியின்பேரில் முழுக்குடும்பமும் பெர்த்தில் வாழ அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**பிரியா- நடேஸ் குடும்பம்**

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் நோக்கில் நடேசலிங்கமும் பிரியாவும் தனித்தனியாக கடந்த 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் படகு மூலம் அவுஸ்திரேலியா வந்தடைந்தனர்.

நடேசலிங்கம் மற்றும் பிரியாவின் புகலிடக்கோரிக்கை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட அதே நேரம் இவர்களுக்கு வழங்கப்பட்ட bridging வீசாவும் 2018 ஆரம்பத்துடன் காலாவதியாகிவிட, அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை இறங்கியது.

2018 மார்ச் மாதம் இக்குடும்பம் பல காலமாக வாழ்ந்துவந்த குயின்ஸ்லாந்தின் Biloela பகுதியிலிருந்து அவர்களை பலவந்தமாக அழைத்துச்சென்று நாடுகடத்த முற்பட்ட வேளையில் சட்டநடவடிக்கை காரணமாக அம்முயற்சி இறுதிநேரத்தில் தடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் மெல்பர்ன் குடிவரவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதையடுத்து நடேசலிங்கம்-பிரியா குடும்பம், நாடு கடத்தப்படக்கூடாதென வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2018 ஜூன் 21 அன்று மெல்பர்ன் பெடரல் Circuit நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

**நாடு கடத்த முயற்சி**

இதைத் தொடர்ந்து மீண்டும் இக்குடும்பத்தை நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கிய குடிவரவுத்துறை அதற்கான கடிதத்தையும் தீர்ப்பு வெளியான அடுத்தநாளே கையளித்தது. ஆனால், நீதிமன்றின் தீர்ப்பிற்கெதிராக நடேசலிங்கம்-பிரியா குடும்பம் மேன்முறையீடு செய்திருந்ததால் குறித்த குடும்பம் நாடுகடத்தப்படுவது இரண்டாவது தடவையாகவும் தடுக்கப்பட்டது.

ஆனால், இக்குடும்பத்தின் மேன்முறையீட்டு மனுவை 2018 டிசம்பர் 21ஆம் திகதி விசாரித்த பெடரல் நீதிமன்றம் அதனைத் தள்ளுபடி செய்ததுடன் இக்குடும்பத்தை நாடுகடத்துமாறும் உத்தரவிட்டிருந்தது. பின்னர் இக்குடும்பம் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்த நிலையில் அதுவும் நிராகரிக்கப்பட்டது. இப்படியாக சுமார் ஒன்றரை வருடங்களாக இக்குடும்பம் மெல்பர்னிலுள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**விமானத்தில் ஏற்றப்பட்ட பின்னர்**

கடந்த 2019 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தும் நோக்கில் சிறப்பு விமானமொன்று அவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட போதிலும், இறுதி நேரத்தில் குழந்தை தருணிகா சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் நீதிமன்றம் கடைசி நிமிட தடை உத்தரவை பிறப்பித்ததைத் தொடர்ந்து விமானம் டார்வினில் தரையிறங்கிய போது குடும்பம் விமானத்தை விட்டு வெளியேற்றப்பட்டு பின்னர் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பப்பட்டது.

இதையடுத்து தருணிகாவின் பாதுகாப்பு குறித்தும், தருணிகாவின் சூழ்நிலைகளை உள்துறை அமைச்சர் மதிப்பீடு செய்திருக்க வேண்டுமா என்பது குறித்தும் விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம், பிரதான விண்ணப்பதாரியான தருணிகாவின் விண்ணப்பம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் இவ்விசாரணை முடியும் வரை அவர் நாடு கடத்தப்படக்கூடாது எனவும் உத்தரவிட்டது.

தருணிகா குழந்தை என்பதால் அவரிடமிருந்து பெற்றோரை தனியாகப்பிரித்து நாடு கடத்தமுடியாது என்பதால் முழுக் குடும்பமும் நாடுகடத்தலிலிருந்து தப்பித்து தொடர்ந்தும் சட்டப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**எஸ்.பி.எஸ்.**



# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை; உண்மையான பின்னணி என்ன?

**அருண் ஆரோக்கியநாதர்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொது மன்னிப்பின் கீழ் பொசன் போயா தினமான நேற்றுமுன்தினம் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 16 பேரில் 15 பேர் அநுராதபுர சிறைச்சாலையில் இருந்தவர்கள். ஒருவர் யாழ்ப்பாணம் சிறையில் இருந்தவர். இவர்களில் இருவர் மாத்திரமே முறையே 14 மற்றும் 10 வருட தண்டனைக்காலத்தின் அடிப்படையில் சிறையில் இருந்தவர்கள் ஏனையவர்கள் இரண்டு வருடத்திற்கும் எட்டு வருடத்திற்கும் இடைப்பட்ட தண்டனைக்காலத்திற்காக சிறையில் இருந்தவர்கள்.

இவர்களில் பலரும் ஒருசில மாதங்களில் தமது தண்டனைக்காலத்தை முறைப்படி பூர்த்திசெய்து விடுதலையாக இருந்தவர்கள் என இந்த விவகாரம் பற்றி அக்கறையோடு செயற்படும் வழக்கறிஞரொருவர் உறுதிப்படுத்தினார். இந்த 16 பேரில் நீண்டகால அரசியல் கைதிகள் யாரும் விடுதலை செய்யப்படவில்லை என்ற பதிவுகளை டுவிட்டரிலும் காணமுடிந்தது.

மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசாங்க காலத்தில் 120 பேர் வரையான தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்பட்டிருந்தனர். இப்போது விடுவிக்கப்பட்ட 16 பேர் போக 2015ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களில் 65 பேரும், 2015இற்கு பின்னர் கைதுசெய்யப்பட்ட 40 பேரும், 2019 நவம்பர் மாதத்திற்கு பின்னர் கைது செய்யப்பட்ட 44 பேருமே தற்போது தடுப்புக் காவலில் உள்ளனரென ஊடகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் பேசியிருந்தார்.

அமைச்சர் நாமலின் பேச்சைத் தொடர்ந்து தமிழ்க் கைதிகள் விடுதலை தொடர்பாக தமது பங்களிப்பு தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

ராஜபக்ஷக்களை அறிந்தவர்களுக்கு, அவர்கள் தமக்கு கீழ் உள்ளவர்களின் கருத்துக்களைக் கேட்டு முடிவு எடுப்பார்களா என்பது தெரியும்!

நாட்டை உலுக்கிக்கொண்டிருக்கின்ற கொரோனா பெருந்தொற்றின் மூன்றாம் அலை கடுமையாக இலங்கையைத் தாக்கிக்கொண்டிருக்கும் நிலையிலும் சுகாதாரத் துறையின் கோரிக்கைகளையே அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

'தமிழ் அரசியல் கைதிகள்' என்ற பதத்தை ராஜபக்ஷ தரப்பிலுள்ளவர்கள் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டவர்கள் என்பதே அரசின் நிலைப்பாடு . இந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைக் கவனத்திற்கொண்டிருப்பார்களா?

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தாம் சிறையில் இருந்த காலப்பகுதியில் அங்கிருந்த நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் துன்ப நிலையை உணர்ந்து தனிப்பட்ட ரீதியில் சிலருக்கு உதவிய தருணங்கள் தொடர்பான பதிவுகளைப் பார்த்தேன். இதன் காரணமாக உண்மையிலேயே அவருக்கு மனமாற்றம் ஏற்பட்டதா ?

கருணை உணர்வால் தமிழ் கைதிகள் பற்றி பேசினார் என்று ஏற்க முடியாதவர்களுக்குகூட எதிர்காலத்தில் நாட்டின் தலைவராக வருவதற்கு பகிரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ள நாமல், தமிழ் மக்கள் மத்தியிலும் தன்னைப் பிரபல்யப்படுத்துவதற்கு இவ்வாறான நகர்வை மேற்கொண்டிருக்கலாம் என்ற கருத்து ஏற்புடையதாக இருக்கலாம். ஆனாலும் இதற்கு உண்மையான காரணம் என்ன?

ஒரு சில காரணங்கள் இதற்காகச் சொல்லப்படுகின்றன.

1) பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரும் இலங்கை தொடர்பான தீர்மானம் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்மானம் இம்மாதம் 10 ஆம் திகதியன்று ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

2017ம் ஆண்டில் GSP + சலுகையை இலங்கைக்கு வழங்கிய போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்துவிட்டு சர்வதேச நியமங்களுக்கு அமைவான சட்டமொன்றைக் கொண்டுவர வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியிருந்தது. இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் இலங்கை அரசாங்கத்தை உலுக்கியிருந்தது.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இல்லாது போனால் 580 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது இலங்கை நாணயத்தில் 11 ,550 கோடி ரூபாய் அளவிலான இழப்பை இலங்கை எதிர்கொள்ளவேண்டியேற்படும் எனக் கடந்த வாரத்தில் இலங்கையின் முன்னணி ஆங்கிலப் பத்திரிகையான 'சண்டே ரைம்ஸ்' சுட்டிக்காட்டியிருந்தது.



இந்த ஆண்டு முதல் எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 29 பில்லியன் அமெரிக்க டொலர்களை அதாவது 5 லட்சத்து 70 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய் பெறுமதியான தொகையை வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய இக்கட்டான நிலையில் இலங்கை உள்ளது. இதில் வருடத்திற்கு குறைந்தபட்சம் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களையேனும் செலுத்த வேண்டியது அவசியமாகும்

வெளிநாடுகளிடம் பெற்றகடனைத் திருப்பிக் கொடுத்தத் தவறினால் என்ன நடக்கும்? கடும் சிக்கலில் இலங்கையின் பொருளாதாரம் தத்தளித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையும் இல்லாது போய்விட்டால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்து இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தை சமாளிப்பதற்கு எடுத்த நடவடிக்கையாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை அமைந்ததா என்ற கேள்வியும் எழுகின்றது.

"தமிழ்க் கைதிகளை அரசாங்கம் எப்போதோ விடுதலை செய்திருக்க முடியும். அரசாங்கத்தில் உள்ளவர்கள் இதுவிடயமாக தாமாகவே முன்வந்து தமிழ்க் கட்சிகளோடும் பேசியிருந்தனர். எனினும், இதன் மூலம் எப்படி அரசியல் லாபம் பெறலாம் எனத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் வந்த நிலையில் தற்போது ஓடித்திரிகின்றனர்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் நாமல் பாராளுமன்றத்தில் தமிழ்க் கைதிகள் விடுதலை தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள், அதனைத்தொடர்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைக்கப்போவதாக நீதி அமைச்சர் அலி ஷப்ரி தெரிவித்த கருத்துக்கள், அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பில் 16 தமிழ்க்கைதிகளை விடுதலை செய்தமை அனைத்துமே ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தின் எதிரொலியா என்ற ஐயப்பாடு வலுவாக எழுவதைத் தவிர்க்க முடியாது.

இருந்த போதிலும் இதற்கு மாற்றான கருத்து ஒன்றும் முன்வைக்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் ஏற்படுத்திய அழுத்தம் காரணமாக தமிழ்க் கைதிகள் விடுதலை இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை என்கிறார் அரசியல் கைதிகளை விடுதலை செய்தவற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை எம். சக்திவேல்.

"துமிந்த சில்வாவை விடுதலைசெய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துவிட்ட நிலையில் அதனால் மக்கள் மத்தியில் எழக்கூடிய அவதானத்தை திசைதிருப்புவதற்கும் நியாயப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாகவே தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கவேண்டும்" எனத் தெரிவித்தார் அருட்தந்தை சக்திவேல். முன்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்யாமல் நாமல் பாராளுமன்றத்தில் பேசிய இரண்டு நாட்களில் கைதிகள் விடுதலை எப்படிச் சாத்தியமாகும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய பௌத்த தேரர்கள் ஊடகங்கள் மத்தியில் இருந்தே கடந்த சில மாதங்களாக அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்புகளும் கடும் விமர்சனங்களும் வெளியாகிவருகின்ற நிலையில் சரிகின்ற ஆதரவுத்தளத்தை நிலைநிறுத்தவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதில் முக்கிய பங்குவகித்திருந்த ஊடகங்களில் ஒன்றான ஹிரு தொலைக்காட்சி சில வாரங்களுக்கு முன்பாக பொலிஸாரின் செயல் கள் தொடர்பாக கடும் விமர்சனங்களை முன்வைத்திருந் தது. இந்த நிலையில் துமிந்த சில்வாவை விடுதலை செய்ததன் மூலமாக ஹிரு ஊடக வலையமைப்பினரை தேர்தல் காலத்தில் இருந்தவாறு தம்வசப்படுத்துவதற்கு ஜனாதிபதி செயல்பட்டுள்ளார் எனவும் தேர்தல் காலத் தில் வழங்கிய வாக்குறுதியையே ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளார் எனவும் சமூக வலைத்தளங்களில் தற்போது கருத்துக்கள் பதிவாகி வருகின்றன.

துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டமையை அடுத்து இலங்கையில் பல்வேறு தரப்பட்டவர்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புக்களைப் பார்க்கின்ற போது தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டமையானது கவனத்தை திசைதிருப்புகின்ற அன்றேல் துமிந்தவின் விடுதலையை நியாயப்படுத்துவதற்கான ஒரு நகர்வாகவே பார்க்கவேண்டியுள்ளது.

அரசாங்கத்தின் தீர்மானமெடுக்கக்கூடிய நிலையிலுள்ள ராஜபக்ஷக்களும் அவர்களுக்கு ஆதரவளிக்கின்ற தரப்பினரும் தமிழ்க் கைதிகள் விடயத்தில் உண்மையாகவே அர்ப்பணிப்புடன் உள்ளனர், இன்று 16 பேர் விடுவிக்கப்பட்டமை துமிந்தவிற்கான திசைதிருப்ப அல்ல என்பதை உறுதிசெய்யவேண்டுமாக இருந்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக தடுப்பிலுள்ளவர்களையேனும் விரைந்து விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

> **"ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் ஏற்படுத்திய அழுத்தம் காரணமாக தமிழ்க் கைதிகள் விடுதலை இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை என்கிறார் அரசியல் கைதிகளை விடுதலை செய்தவற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை எம்.சக்திவேல்.**

நன்றி : குளோப் தமிழ்

ஈழநாடு

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 7
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

கல்வி tv CHANNEL

**01.** பின்வரும் பந்தியை நன்றாக வாசியுங்கள்.

'' இவன், வகுப்பாசிரியரைப் போலச் சட்டம் பேசுகிறான். ஒழுங்கு என்கிறான்.... அத்துடன் பொருட்களை உரிய இடத்தில் வைக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும் என்றும் சொல்கிறான். அதுமட்டுமன்று எல்லா மாணவர்களும் சத்தியனிடமே அன்பாகவும் நேசமாகவும் இருக்கிறார்கள். அவனுக்குத் தனி மரியாதையே கொடுக்கிறார்கள்'' எனத் தன் எரிச்சலை ஆதவன் ஏனைய மாணவர்களிடமும் வெளிப்படுத்தினான். ஆனாலும் மாணவர்கள் பலர் சத்தியனுக்கு ஆதரவாகவே பேசினார்கள்.

* கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) அதிகமான மாணவர்கள் யாருக்கு ஆதரவாகப் பேசினார்கள் எனப் பந்தியில் கூறப்படுகிறது?
..............................................................................................

(ii)

அ. ஒருவர் என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ஒன்றை எழுதுக.
..............................................

ஆ. உயர்திணை, இறந்தகாலப் பன்மை, வினைச்சொல் ஒன்றை எழுதுக.
..............................................

(iii) பொறாமையை என்னும் கருத்தை விளக்கும் இன்னொரு சொல்லைப் பந்தியிலிருந்து எடுத்து எழுதுக.
..............................................

(iv) பந்தியில் வந்துள்ள உவமானம் ஒன்றைத் தெரிந்தெடுத்து எழுதுக.
..............................................

(v) இரட்டைக்கொம்பு, கீழ்க்கால், விசிறி, அரவும் என்பன மட்டும் இடம்பெறும் ஒரு சொல்லை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.
..............................................

**02.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(i) கீரியைக் கண்ட பாம்பு ..................(அளை / அலை / அழை) யினுள் புகுந்தது.
(ii) இராமன் எய்த ..............................(பாணம் / பானம்) பட்டு மான் கீழே விழுந்தது.

**(3)** பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

(i) வழக்கில் குற்றம் சாட்டப்படுபவர்..........................................
(ii) ஒருவர் / ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுவது..............................................

**4)** பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.

நெஞ்சு புண்ணாகுதல்
..............................................................................................

**5.**

அ. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

(i) உப்பிட்டவரை ..............................................

ஆ. பின்வரும் உவமைத் தொடருக்குரிய கருத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அடியற்ற மரம் போல ( நிலையான தன்மை / மூல பலமற்றது)

**6.** கீழே தரப்பட்ட இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) மாட்டு வண்டி .......................(மடமட / கடகட) என ஓடியது.
(ii) நாம் ................. (அருமை பெருமை / அல்லும் பகலும்) ஆர்வத்தோடு கல்வி கற்க வேண்டும்.

**7.** பின்வரும் பாடல்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புங்கள்

(i) மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோருக்குச்
..............................................................................................

(ii) காலை மாலை உலாவி நிதம்
..............................................................
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

(iii) நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
..............................................................................................

**8)** வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

(i) பசுவுக்குப் பின்னே கன்று ..............................(ஓடியது. / ஓடின.)
(ii) நேற்றுத் தம்பியும், தங்கையும் பாடசாலைக்குச் (சென்றார்கள். / செல்வார்கள்.)
(iii) பூக்களின் மீது தேனீக்கள் ..........................(மொய்த்தது. / மொய்த்தன.)
(iv) புலியொன்று மானைத் துரத்திச் ...................(சென்றன. / சென்றது.)

**(9)** வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

(i) ''பாடினோம்'' என்பது ...........................(உயர்திணை, எதிர்காலப் பன்மை வினைமுற்று / உயர்திணை, இறந்தகால பன்மை வினைமுற்று)
(ii) "நாங்கள்" என்பது ................................(அஃறிணை, பன்மைப் பெயர்ச்சொல் / உயர்திணை பன்மைப் பெயர்ச்சொல்)
(iii) மயில் என்பது .................................(அஃறிணை ஒருமை வினைச்சொல் / அஃறிணை ஒருமை படர்க்கைச் சொல்)

**(10)** பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Please excuse me ..............................................................
(ii) Let's go home ..............................................................

* **11, 12** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

**(11)** Where ............................ (is / are) you going?
**(12)** I am reading a ......................(book / books)

**(13)** பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி, ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
நான் நாளை வருவேன் ..............................................................

**(14)** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
உங்களுக்குப் பசிக்கிறதா?..............................................................

# ஜுலை 6இல் பஸில் எம்.பியாகப் பதவியேற்பார்

## மறுநாளே அமைச்சுப் பதவியும் கையளிப்பு என தகவல்

கொழும்பு, ஜுன் 26

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்‌ஷ எதிர்வரும் 6ஆம் திகதி தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்வார் என்று அக்கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா சென்றிருந்த பஸில் ராஜபக்‌ஷ நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய நிலையில், சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். எனினும், இணையம் ஊடாக முக்கிய சந்திப்புகளை கட்சி செயல்பாட்டாளர்களுடன் அவர் நடத்தி வருகின்றார்.

இதன்போது பாராளுமன்ற பிரவேசம் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. இதன்படி பஸில் எதிர்வரும் 6ஆம் திகதி எம்.பியாகப் பதவியேற்க வேண்டும் என அவருக்கு நெருக்கமானவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட பின்னரே பஸில் பாராளுமன்றம் வர வேண்டும் என மேலும் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



பஸில் ராஜபக்‌ஷ பாராளுமன்றம் வருவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் எம்.பியொருவர் பதவி துறக்கவுள்ளார்.

6ஆம் திகதி சபைக்கு வரும் பஸிலுக்கு மறுநாள் பொருளாதார விவகார அமைச்சு வழங்கப்படவுள்ளது எனவும் இன்னொரு தகவல் தெரிவித்தது. (இ)

# மாகாணங்களுக்கிடையிலான பயண தடை தொடர்ந்து நீடிப்பு

## எப்போது தளர்வு என்று இப்போது கூறமுடியாது என்கிறது பொலிஸ்

**கொழும்பு, ஜுன் 26**

**"நாட்டில் கடந்த புதன்கிழமை இரவு 10 மணி முதல் அமுலில் இருந்த பயணக் கட்டுப்பாடு நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்பட்டாலும், மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும். அந்தத் தடை எப்போது நீக்கப்படும் என்று இப்போது எம்மால் கூறவே முடியாது."**



- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பதில் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மாவட்டங்களுக்குள் பயணத் தடை தளர்த்தப்பட்டாலும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளவர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் இருப்பவர்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடையும் வரை வெளியில் வர முடியாது எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, அத்தியாவசிய தேவைக்காக மட்டும் வெளியில் செல்லுமாறும், சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுமாறும் சுகாதாரத் தரப்பு, பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

# 'மொட்டு' கூட்டணி குழப்பம் விரைவில் முடிவுக்கு வரும்!

## அமைச்சர் தினேஷ் நம்பிக்கை

கொழும்பு, ஜுன் 26

"கூட்டணி அரசு என்றால் குழப்பம் இருக்கவே செய்யும். எனவே, பிரச்னைகளை விரைவில் பேசித் தீர்த்து முன்னோக்கி பயணிப்பதே அரசின் எதிர்ப்பார்ப்பாகும்."



- இவ்வாறு சபை முதல்வரும் வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான மொட்டு கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறான கருத்துகள், நிலைப்பாடுகள் இருக்கக்கூடும். இவை இணைந்து கூட்டணி அமைக்கும்போதும் மாறுபட்ட கருத்துகள் முன்வைக்கப்படலாம். எனவே, பிரச்னைகள் இருப்பின் அவை குறித்து பேசி, தீர்த்து கூட்டணி அரசாக முன்னோக்கி பயணிப்போம்.

தற்போதைய சூழ்நிலையில் உலக பொருளாதாரத்துக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்திலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, சட்ட திட்டம், கொள்கைத் திட்டம் மற்றும் வேலைத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது" - என்றார். (இ)

# தொற்று உச்சமடைந்தால் கடும் பயணக் கட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 26

"கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுமாயின், பயணக் கட்டுப்பாடு கடுமையாக்கப்படும்."

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

எனவே, பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ள நிலையில், அவசியமின்றி வீடுகளிலிருந்து வெளியேற வேண்டாம் எனவும், இயலுமானவரை வீடுகளிலிருந்து பணிபுரியுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை குறைவடையக்கூடும் எனவும் அவர் எதிர்வு கூறினார். (இ)



# தேங்காய் திருடிய இருவர் சிக்கினர்

வாழைச்சேனை, ஜுன் 26



தேங்காய்களைத் திருடிய இருவரை, தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து மடக்கிப் பிடித்து, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த சம்பவம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.இதில் மூவர் இணைந்து தேங்காய்களைத் திருடிய போது, இருவர் வசமாக சிக்கியுள்ளனர்.

"எமது தோட்டத்தில் தேங்காய்கள் தொடர்ந்து திருடப்படுகின்றன. அதனைக் கண்காணித்தபோது இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரைப் பொதுமக்களின் உதவியுடன் மடக்கிப் பிடித்தோம்" என்று தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு திருடப்பட்ட 52 தேங்காய்களுடன் இரு நபர்களையும் வாழைச்சேனை பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 743 பேர் கைது

கொழும்பு, ஜுன் 26

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 743 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டி பகுதியிலேயே பெருமளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைத் தவிர, மாத்தளையில் 78 பேரும், கண்டியில் 66 பேரும், புத்தளத்தில் 50 பேரும் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது எனவும், முகக்கவசம் அணியத் தவறுவோர் தொடர்பில் அதிகக் கவனம் செலுத்தப்படுகின்றது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றுமாறு மக்களைப் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ

# சமூகத்தில் எந்த இடத்திலும் தொற்றாளர் இருக்கக்கூடும்

## மக்களே மிக அவதானம் என சுகாதார சங்கம் அறிவுறுத்து

கொழும்பு, ஜுன் 26

"சமூகத்தில் எந்த இடத்திலும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இருக்கக்கூடும். எனவே, வைரஸ் பரவக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. சுகாதார நடைமுறைகளை மக்கள் கடுமையாகப் பின்பற்ற வேண்டும். மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்."

- இவ்வாறு வலியுறுத்தினார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண. அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. நாளாந்த நடவடிக்கைகளுக்காக வெளியில் செல்பவர்கள் அவதானமாகவே இருக்க வேண்டும். சமூகத்தில் எந்த இடத்திலும் தொற்றாளர்கள் இருக்கக்கூடும். அவர்களுடன் பழகுவதன் ஊடாக உங்களுக்கும் தொற்று ஏற்படலாம்.



எனவே, சுகாதார நடைமுறைகளை, பழக்கவழக்கங்களை உரிய வகையில் பின்பற்றுமாறு கேட்கின்றோம்.

அநாவசியமான முறையில் வீட்டில் இருந்து வெளியேற வேண்டாம்" - என்றார். (இ)

# சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக இணையுமாறு ஜப்பான் அழைப்பு!

## அமெரிக்கா, ஐரோப்பா, ஆசிய நாடுகளுக்கு விடுத்தது!



ரோக்கியோ, ஜூன் 26

தென் சீனக் கடலில் சீனாவின் ஆக்கிரோஷமான விரிவாக்க கொள்கைக்கு எதிராக ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் பிற ஆசிய நாடுகள் ஒன்றிணைய வேண்டும் என்று ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் நோபூ கிஷி அழைப்பு விடுத்துள்ளார்.

ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பாதுகாப்பு தொடர்பான உபகுழுவில் உரையாற்றியபோதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

தென் சீனக் கடலில் காணப்படும் சிறுசிறு நிலப்பரப்புகளை சீனா தொடர்ந்து இராணுவமயமாக்குகிறது. சீனா அங்கு இராணுவ வசதிகளை உருவாக்கி முகாம்களை அமைத்து வருகிறது.

அது மட்டுமல்லாமல், இராணுவமாயமாக்கும் உட்கட்டமைப்புகளையும் உருவாக்கி வருகின்றது. விசேடமாக ஓடுபாதைகள், துறைமுக வசதிகள், ராடர் வசதிகள் உள்ளிட்டவற்றை அங்கு கட்டமைத்து வருகின்றது.

அதுமட்டுமன்றி அந்த நிலப்பரப்புகளில் சீனா சுழற்சி முறையில் கண்காணிப்பு விமானங்களையும், எச்சரிக்கை விமானங்களையும் இயக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், கப்பல் மேற்பரப்பில் இருந்து விமானங்களை தாக்கும் ஏவுகணைகள் மற்றும் வான்வெளியில் ஏவுகணைகளை முறியடிக்கும் வகையிலான ஏவுகணைகள் ஆகியனவும் அந்த நிலப்பரப்புக்களில் நிறுத்தி வைக்கப்பட்டு பயிற்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தவிர, சீனா அடிக்கடி இராணுவ பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. மேலும், இடைப்பட்ட காலங்களில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பொலிஸ்ரிக் ஏவுகணைகளையும் ஏவி பயிற்சிகளை மேற்கொண்டுள்ளது.

ஜப்பானைப் பொறுத்தவரையில் தென் சீனக் கடலில் சட்டத்தின் ஆட்சியை ஆதரிப்பதையே நிலையான நிலைப்பாடாக கொண்டுள்ளது. இதற்கான முயற்சியாக, தொலைபேசி மற்றும் காணொலி மாநாடுகளின்போது ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகளுக்கு மேற்குறிப்பிட்ட விடயங்களை வெளிப்படுத்தி ஜப்பானின் கவலைகளை தெரிவித்திருக்கின்றேன்.

குறிப்பாக எமது கவலைகளை உக்ரைன் போன்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள முடிந்தது. அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் எமது கவலைகளை உணர்ந்து கொண்டுள்ளன. இதுவொரு முதற்படியாகும்.

மேலும், சீனா-தாய்வான் உறவைப் பொறுத்தவரை, தொடர்புடைய தரப்புக்களின் நேரடி உரையாடல்கள் மூலம் அமைதியாக தீர்க்கப்படும் என்று எதிர்பார்ப்பது ஜப்பானின் நிலைப்பாடு. அவ்வாறு நடக்கின்றபோது பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு வித்திடுவதாக இருக்கும். எவ்வாறாயினும் பல அயல் நாடுகளுக்கு எதிராக சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை மோதல் அச்சத்தைத் தூண்டியுள்ளது. இது சம்பந்தமாக அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து கரிசனை கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)



# கனடாவில் கண்டறியப்பட்ட புதைகுழியில் 751 எச்சங்கள்!

## பழங்குடி சிறார்களுடையவை என சந்தேகம்!

ஒன்ராறியோ, ஜூன் 26

கனடா - சஸ்காட்செவன் மாகாணத்தில் உள்ள மேரிவல் இந்தியன் பழங்குடி சிறுவர்களுக்கான முன்னாள் குடியிருப்புப் பாடசாலை வளாகத்தில் 751 மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று மாகாண கோவெஸ்ஸஸ் பழங்குடியின தலைவர் காட்மஸ் டெலோர்ம் தெரிவித்தார்.

இவற்றில் பெரும்பாலானவை பழங்குடியின குழந்தைகளில் எச்சங்களாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குடியிருப்பு பாடசாலையில் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டது தொடர்பில் வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்து பேசும் போதே காட்மஸ் இவ்வாறு கூறினார்.

முன்னதாக பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கம்லூப்ஸ் நகருக்கு அண்மையாக 215 பழங்குடி சிறுவர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டது. இந்தச் சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஆனால், இப்போது கண்டறியப்பட்ட சஸ்காட்செவன் புதைகுழி கனடாவில் இதுவரை கண்டறியப்பட்ட பழங்குடி குடியிருப்பு பாடசாலைகளில் அடையாளப்படுத்தப்படாத மனித புதைகுழிகளில் மிகப்பெரியது என்றும் அவர் கூறினார்.

பழங்குடி மக்கள் நீதி மற்றும் சிறப்பான வாழ்க்கை நிலைமைகளுக்காக தொடர்ந்து போராடி வருவதாகவும் காட்மஸ் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, சஸ்காட்செவன் மாகாண தலைநகர் ரெஜினாவிலிருந்து 140 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மேரிவல் இந்தியன் குடியிருப்பு பள்ளியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்லறைகள் குறித்து மிகவும் வருந்துகிறாரென கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்தார். (ஐ)



# ‘மெக்கஃபி’ நிறுவுநர் ஜோன் சிறையில் திடீர் மரணம்!

பார்ஸிலோனா, ஜூன் 26

மெக்கஃபி அன்ரிவைரஸ் நிறுவனத்தின் நிறுவுநரும் மென்பொருள் துறையின் முன்னோடியுமான ஜோன் டேவிட் மெக்கஃபி ஸ்பெயின் சிறையில் உயிரிழந்தார்.

கணனி பாதுகாப்பு அன்ரிவைரஸ் தயாரிப்பில் முன்னோடியான மெக்கஃபி நிறுவனத்தின் நிறுவுநர் மெக்கஃபி (வயது 75). அவர் 2014இலிருந்து 2018 வரை அமெரிக்காவில் வரி ஏய்ப்பில் ஈடுபட்டாரென குற்றம் சாட்டப்பட்டது.

இதுதொடர்பான வழக்கில், இவர் 2020ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ஸ்பெயினின் பார்ஸிலோனா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

பார்ஸிலோனா சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவரை ஒப்படைக்க வேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் கோரியது. இதுதொடர்பான வழக்கை விசாரித்த ஸ்பெயின் தேசிய நீதிமன்றம் மெக்கஃபியை அமெரிக்கா அனுப்ப அனுமதி அளித்தது.

இந்த சூழலில் கடந்த புதன்கிழமை சிறையில் அவர் உயிரிழந்தாரெனத் தகவல் வெளியானது. இது தற்கொலையாக இருக்கலாம் என்ற வகையில் விசாரணை நடந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்கஃபியின் வழக்கறிஞர்கள் இதுகுறித்து கூறும்போது, “ஜோன் மெக்கஃபியை அமெரிக்கா அனுப்புவதற்கான வழக்கில் அளிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து சட்ட ரீதியில் போராடுவதற்கான ஏற்பாடுகளில் இருந்தோம். ஆனால், அவரின் திடீர் மரணம் அதிர்ச்சியளிக்கிறது” என்றார். (ஐ)

# 12 மாடிக்கட்டடம் இடிந்து வீழ்ந்தில்! நூற்றுக்கும் மேற்பட்டோர் சிக்கினர்

## அமெரிக்காவில் துயரம்



மியாமி, ஜூன் 26

அமெரிக்காவில் 12 மாடிக் கட்டடம் சரிந்து வீழ்ந்தது. இதில் சிக்கி 100இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. நேற்றுவரை 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தின் தலைநகர் மியாமியில் கடற்கரை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குடியிருப்பு வளாகத்தில் லத்தீன் அமெரிக்காவை சேர்ந்தவர்களே அதிகளவில் தங்கியிருந்தனர். 1981 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தின் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்த நிலையிலேயே இந்தக் கட்டடம் நேற்று வெள்ளிக்கிழமை பின்னிரவு ஒரு மணியளவில் சரிந்து வீழ்ந்தது.

இந்த விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சிக்கிக்கொண்டனர். எனினும், இடிபாடுகளில் சிக்கிய 12 வயது சிறுவன் உட்பட 50இற்கும் மேற்பட்டவர்களாவர். நேற்று வரை 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. எனினும் இந்தச் சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

கட்டடம் இடிந்து விழுந்தமைக்கான காரணம் குறித்து அறியவரவில்லை. (ஐ)

# 43 முறை கொரோனா தொற்றியும் மீண்டெழுந்த 72 வயது முதியவர்!

இங்கிலாந்தில் 72 வயது முதியவர் ஒருவர் 43 முறை கொரோனா தொற்றுக்கு இலக்காகியும் அதிலிருந்து மீண்டு வந்துள்ளார்.

இவ்வாறு அவர் மீண்டமைக்கு அதிக நாட்கள் அவரின் உடலில் கொரோனா வைரஸ் தங்கியிருந்தமைதான் என்று கூறப்படுகின்றது. டேவ் ஸ்மித் என்ற சாரத்தியப் பயிற்றுவிப்பாளரே இவ்வாறு 43 முறை தொற்றுக்குள்ளாகியும் மீண்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

“கடந்த 10 மாதங்களில் 43 முறை எனது உடலில் கொரோனா பொசிட்டிவ் அறிகுறி தென்பட்டது. இதற்காக 7 முறை மருத்துவ மனையில் சிகிக்சை பெற்றுள்ளேன். இறக்கப் போகிறேன் என்ற எண்ணத்தில் எனக்கு சவப்பெட்டியை தயார் செய்து விட்டனர். ஆனால், கடவுளின் செயலால் நான் அதிர்ஷ்டவசமாக தப்பினேன் என்றார்.

கடந்த 10 மாதங்களாக இவரது உடலில் கொரோனா வைரஸ் மீண்டும் மீண்டும் தாக்கி வெளியேறியுள்ளது. இதன்மூலமாக உலகி லேயே அதிகமுறை வைரஸால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து விடுபட்ட நபர் என்கிற பெயரை டேவ் ஸ்மித் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு எதிரான ரி - 20: தொடர் இங்கிலாந்து வசம்!

கார்டிப், ஜூன் 26

இலங்கைக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்ட இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியது.

இங்கிலாந்து சென்றுள்ள இலங்கை அணி 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதல் போட்டியை இங்கிலாந்து அணி 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இரண்டாவது போட்டி நேற்று கார்டிப்பில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்கம் கொடுத்த தனுஷ்க குணதிலக 3 ஓட்டங்கள், அவிஸ்க பெர்னாண்டோ 6 ஓட்டங்கள் என்று சொற்ப ஓட்டங்களுடனே ஆட்டமிழந்தனர்.

3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த அணித் தலைவர் குஷல் பெரேரா - குஷல் மெண்டிஸ் இணை நிதானம் காட்டியது. இதனால், 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தது.

குஷல் பெரேரா 21 ஓட்டங்களுடனும், குஷல் மெண்டிஸ் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து மீண்டும் அணி தடுமாறியது.




நிரோஷன் டிக்வெல்ல 3, தசுன் சானக 8, வனிந்து ஹசரங்க 3 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் இலங்கை 7 விக்கெட்கள் இழப்புக்கு 111 ஓட்டங்களைப் பெற்றது.

இசுறு உதான 19, அகில தனஞ்சய 2 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் மார்க் வூட், அடில் ரசீத் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து அணி. பவர்பிளேயில் தொடக்க வீரர்களில் ஒருவரான பெயர்ஸ்ரோ 0, டேவிட் மலான் 4, இயன் மோர் கன் 11 என்று மூன்று விக்கெட்களை இழந்து இங்கிலாந்து தடுமாறியது.

தொடக்கம் கொடுத்த ஜசன் றோயும் 17 ஓட்டங்களுடன் டி சில்வாவின் பந்தில் சானகவிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

12 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 69 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது.

இதனால், வெற்றிக்காக 18 ஓவர்களில் 103 ஓட்டங்கள் பெற்றால் இங்கிலாந்துக்கு வெற்றி என்று டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

சாம் பில்லிங் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில், லியம் லிவிங்ஸ்ரன் - சாம் கரன் இணை அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. 17ஆவது ஓவரின் முதல் பந்தில் சிக்ஸர் ஒன்றை விளாசிய சாம் கரன் இங்கிலாந்து அணியை வெற்றி பெறச் செய்தார்.

இறுதியில் 16.1 ஓவரில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 108 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றது.

இலங்கையின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்களையும், துஷ்மந்த சாமீர, பினுர பெர்னாண்டோ, இசுறு உதான ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக லியம் லிவிங்ஸ்ரன் தெரிவானார். (ஐ)



## சானியா இணை தோல்வி!

ஈஸ்ட்போர்ன், ஜூன் 26

இங்கிலாந்தின் ஈஸ்ட்போர்ன் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் சானியா மிர்ஷா இணை தோல்வியடைந்தது.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில், இந்தியாவின் சானியா மிர்ஷா - அமெரிக்காவின் பெத்தானி மேட்டெக் இணை அமெரிக்காவின் கிறிஸ்டினா மெக் காலே - சப்ரினா சான்டாமரியா இணையை எதிர்கொண்டது.

இதில், இரு செற்களையும் 3-6, 4-6 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்தது. (ஐ)



## பிரான்ஸ் - போர்த்துக்கல் அனல் பறந்த ஆட்டம் சமன்!

புடாபெஸ்ட், ஜூன் 26

போர்த்துக்கல் - பிரான்ஸ் அணிகள் மோதிய உதைபந்தாட்டப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. எனினும் புள்ளிகள் அடிப்படையில் இரு அணிகளும் 16 அணிகள் சுற்றுக்கு முன்னேறின.

யூரோ கிண்ணத்துக்காக ஐரோப்பிய நாடுகளின் 24 அணிகள் மோதி வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த 'எவ்' பிரிவுக்கான இறுதிக்கட்ட லீக் சுற்று போட்டியில் பிரான்ஸ், போர்த்துக்கல் அணிகள் மோதின.

பலமான இரு அணிகளும் மோதிய இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அனல் பறந்தது. பந்தை கடத்து வதிலும் தடுத்தாடுவதிலும் இரு அணிகளும் சமபலத்துடன் பொருதின.

31ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல்லுக்கு தண்டனை உதை (பெனால்டி) வாய்ப்பு கிடைத்தது. அதை சாதுரியமான முறையில் கோல் ஆக்கினார். இதுவே, பிரான்ஸ் அணிக்கு எதிராக ரொனால்டோ பதிவு செய்த முதல் கோலாகும்.

இதற்குப் பதிலடியாக 45ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்குக் கிடைத்த தண்டனை உதை வாய்ப்பை கரீம் பென்ஞ்சமா 45ஆவது நிமிடத்தில் கோல் ஆக்கினார். தொடர்ந்து 47ஆவது நிமிடத்தில் போக்பா தட்டிக் கொடுத்த பந்தையும் கோல் வலைக்குள் அடித்தார் பென்ஞ்சமா. இதனால், 2 - 1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணி முன்னிலை பெற்றது.

தொடர்ந்த ஆட்டத்தில் 60ஆவது நிமிடத்தில் கோல் பகுதியில் வைத்து பிரான்ஸ் வீரர் ஜூலெஸ் கோன்டே பந்தை கையால் கையாண்டதால் போர்த்துக்கல்லுக்கு மீண்டும் தண்டனை உதை வாய்ப்புக் கிடைத்தது. இதனையும் இலாவகமாக கோலாக்கினார் ரொனால்டோ.

போட்டி சமநிலையானதைத் தொடர்ந்து மீண்டும் ஆட்டம் ஆக்ரோஷமானது. இதனால், அடிக்கடி தவறாக வீரர்கள் ஆடினர். இதற்காக பிரான்ஸின் 4 வீரர்களுக்கு மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டது. எனினும் போட்டி முடிவு வரை மேலதிகமாக இரு அணியினரும் கோல் அடிக்காததால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (ஐ)

## சர்ச்சை கோல் உதவியுடன் பிரேஸில் ஹட்ரிக் வெற்றி!

ரியோடிஜெனிரோ, ஜூன் 26

கொலம்பியாவுக்கு எதிரான போட்டியில் சர்ச்சைக்குரிய கோலுடன் ஹட்ரிக் வெற்றியை சுவைத்தது பிரேஸில் அணி.

தென்னமெரிக்க நாடுகள் கோபா அமெரிக்க கிண்ணத்துக்காக பிரேஸிலில் மோதி வருகின்றன.

இதில், ரியோடிஜெனிரோவில் நடந்த நேற்று முன்தினம் நடந்த போட்டியில் 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ள பிரேஸில், கொலம்பியா அணிகள் மோதின.

ஆரம்பமே விறுவிறுப்பாக ஆரம்பமான இந்தப் போட்டியில், 10ஆவது நிமிடத்தில் கொலம்பியா கோல் அடித்தது.

அந்த அணியின் ஜூவன் குவாட்ராடோ கோல் எல்லையை நோக்கி துரக்கியடித்த பந்தை சக வீரர் லூயிஸ் டயஸ் அந்தரத்தில் பறந்து கரணம் அடித்து கோலாக்கி அசத்தினார். இதைப் பார்த்து ரசிகர்கள் அனைவரும் வியந்து போயினர்.

பதிலுக்கு கோல் அடிக்க பிரேஸில் முயன்றபோதும் அது சாத்தியமாகவில்லை. இதனால் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தபோது கொலம்பியா 1 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

எனினும், இரண்டாவது பாதி ஆட்டத்தின் 78ஆவது நிமிடத்தில் பிரேஸிலின் தலைவர் நெய்மர் சர்ச்சைக்குரிய கோலை அடித்தார். நெய்மர் அடித்த பந்து நடுவர் நெஸ்ர் பிடானாவின் உடலில்பட்டு திரும்பியது. ஆட்டத்தை நிறுத்தி மீள ஆட்டத்தை ஆரம்பிக்காமல் தொடர்ந்து விளையாட நடுவர் அனுமதித்தார்.

இந்தச் சமயத்தில் கொலம்பிய வீரர்கள் கவனம் சிதறிய தருணத்தில் பந்தை தன்வசப்படுத்திய பிரேஸிலின் ரெனொன் லோடி அதை கோல் கம்பம் நோக்கி அடித்தார். அதனை சக வீரரான றொபேர்டோ பெர்மினோ தலையால் முட்டி கோல் ஆக்கினார்.




இந்தக் கோல் முறையற்றது என்று கொலம்பிய வீரர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் ஆட்டம் சிறிதுநேரம் தடைப்பட்டது. (ஐ)

## விம்பிள்டன் ரென்னிஸ் விலகினார் சிமோனா!

புக்கரெஸ்ட், ஜூன் 26

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரிலிருந்து நடப்பு சம்பியனான சிமோனா ஹாலேப் விலகுகிறார் என்று அறிவித்துள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்றதும் மிகப் பழமையானதுமான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடரில் கடந்த 2019ஆம் ஆண்டு சம்பியன் வென்ற (2020 தொடர் தொற்று பரவலால் நடக்கவில்லை) சிமோனா ஹாலேப் விலகுகிறார் என்று அறிவித்தார்.

ரோம் நகரில் நடந்த போட்டியின்போது காயமடைந்த சிமோன அதிலிருந்து மீளாததால் தொடரிலிருந்து விலகுகிறார் என்று தற்போது அறிவித்துள்ளார். முன்னதாக, அவர் தனது ருவிட்டர் பதிவில் விம்பிள்டனில் விளையாடுவேன் என்றுஅறிவித்திருந்த நிலையில், அவரின் இந்த முடிவு ரசிகர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.(ஐ)



# யாழ்ப்பாணம், மன்னார் உட்பட 5 மாவட்டங்களில் 10 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூன் 26

யாழ்ப்பாணம், மன்னார், பதுளை, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களின் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் நேற்றுக் காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனடிப்படையில், யாழ். மாவட்டத்தின் கரவெட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் கிராம உத்தியோகத்தர் பிரிவும், மன்னார்



மாவட்டத்தின் தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பியர் மேற்கு, தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், பதுளை மாவட்டத்தின் வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹூலங்கபொல கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்தகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் நொரகல்லவத்த மேல் பிரிவு, பனாவென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் முதலாம் பிரிவு, பனாவென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் 5 ஆம் இலக்க பிரிவு, கபுஹென்தொட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் 5 ஆம் இலக்க பிரிவு ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டதொல கிராம உத்தியோகத்தர் பிரிவின் அம்பத்தென்னவத்த பிரதான பிரிவு மற்றும் க்ளே பிரிவு ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் கூறினார்.

இதனிடையே, தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொழும்பு மாவட்டத்தின் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 233ஆம் இலக்க தோட்டம் மற்றும் மஹவத்த வீதி ஆகியன தனிமைப்படுத்தலிலிருந்து நேற்றுக் காலை 6 மணிக்கு விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# சகல அரசியல் கைதிகளையும் ஏன் விடுதலைசெய்ய முடியாது?

## ஜனாதிபதியிடம் அனந்தி சசிதரன் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 26

"விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் விவாதத்தால் 16 அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும் என்றால் ஏன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவாலும் ஒட்டுமொத்த அரசியல் கைதிகளையும் விடுவிக்க முடியவில்லை?"

- இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நீண்டகாலமாக சிறைகளில் இருந்த அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினர் ஜனாதிபதி



யின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இது மகிழ்ச்சியான விடயமாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் வருடக்கணக்கில் போராட்டங்கள் நடைபெற்று நிலையிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டது உண்மையில் மகிழ்ச்சியான விடயமே. இவை தவிர மிகுதியாக உள்ள அரசியல் கைதிகளும் எந்தவித பாரபட்சமும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும். சிங்கள, முஸ்லிம்கள் கூட ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் இன்றும் பலர் அரசியல் கைதிகளாக உள்ளனர். அவர்களையும் விடுவிக்க வேண்டும் .

ஒரு சாதாரண விளையாட்டுத்துறை அமைச்சரால் விவாதம் ஒன்றை நடத்தி 16 அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும் என்றால் ஏன் ஜனாதிபதியாலும் பிரதமராலும் ஒட்டுமொத்த அரசியல் கைதிகளையும் விடுவிக்க முடியவில்லை என்ற கேள்வி எமக்குள் எழுகின்றது.

இரகசியத் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு பெயர் வெளியிடப்படாமல் இருந்தவர்கள் மற்றும் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விவரங்களையும் அரசு வெளிப்படுத்த வேண்டும்" - என்றார். (இ)

# வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் தடுப்பூசி பெற்ற 15 பேருக்கு ஒவ்வாமை

வவுனியா, ஜூன் 26.

வவுனியா மாவட்டம், இராசேந்திரங்குளம் ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்ட 15 பேர் ஒவ்வாமை காரணமாக ஆடைத்தொழிற்சாலை சிகிச்சைக் கூடம் மற்றும் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் நேற்று சேர்க்கப்பட்டனர்.

வவுனியாவில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களுக்கு இராணுவத்தினர் ஊடாக சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று ஏற்றப்பட்டன. இதன் போது 15 பேர் ஒவ்வாமை காரணமாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

அதில், வவுனியா, இராசேந்திரங்குளம் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் சிலர் தடுப்பூசி ஏற்றப்பட்ட நிலை




யில் ஒவ்வாமை காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களில் பலர் உடல் நிலை சீரடைந்த நிலையில் வீடுகளுக்கும் திரும்பினர்.

இன்னும், சிலருக்கு ஆடைத்தொழிற்சாலையில் உள்ள சிகிச்சை கூடத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் எனவும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். (இ)

# மரண அறிவித்தல்



## தம்பு சிவஞானசுந்தரம்

சுன்னாகம் பொன்னரங்கத்தை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த தம்பு சிவஞானசுந்தரம் அவர்கள் லண்டனில் 13.06.2021 அன்று காலமானார் .

அன்னார் காலஞ்சென்ற தம்பு – பொண்ணுப்பிள்ளை அவர்களின் அருமை மகனும் காலஞ்சென்ற ராமநாதன் – மீனாட்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவபூரணம் அவர்களின் பாசமிகு கணவரும், திருமதி லோகேஸ்வரி விநாயகமூர்த்தி ( லண்டன் ), திருமதி விக்னேஸ்வரி ரவீந்திரன் (கனடா ), சிவதம்பு (சைவ முன்னேற்ற சங்கம் பிரித்தானியா, தலைவர் சுன்னாகம் மக்கள் ஒன்றியம் ஐக்கிய ராச்சியம்), காலஞ்சென்ற செந்தில்நாதன் ஆகியோரின் அன்பு தந்தையும், விநாயகமூர்த்தி, ரவீந்திரன் திருமதி முத்துராணி தம்பு ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவபாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற சிவசங்கரநாதன் ஆகியோரின் அருமை சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தெய்வநாயகி ஆகியோரின் மைத்துனரும் கவிலோன், யசிக்கா, தர்ஷனா, யஸ்வினி, தனுஷா கவிலோன் ஆகியோரின் அன்பு பேரனும், கத்தியா, கைரா, கைரன் ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிரியை :*
St Laurence Church 37, Bromley Road, London, SE6 2TS
***28-06-21*** *( திங்கள்* 6.30 -10.00 am*)*
*தகனம் :*
Hither Green Crematorium Verdant lane , London, SE6 1TP
(10.30 -11.00am)
நேரஞ்சல் :
www.lankasri.com *மற்றும்* www.ninaivukal.info *ஊடாக பார்வையிடலாம்*

*தகவல் :*
**திரு. சிவதம்பு : +447861393295**
**திருமதி லோகேஸ்வரி விநாயகமூர்த்தி**
**+447860864498, +442088528122**
**திருமதி விக்னேஸ்வரி ரவீந்திரன் : +15145504835**

## இலங்கையில்...

கடந்தகாலத் தவறுகளை திருத்திக் கொண்டு முன்நோக்கிப் பயணிப்பதாக குறிப்பிட்ட அவர், கடந்த காலத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய பௌத்த புராதனச் சின்னங்களை பாதுகாக்க தமது அரசாங்கத்தினால் முடிந்திருப்பதாகவும் பெருமிதம் வெளியிட்டார்.

நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் மக்கள் சார்ந்த எந்தவொரு விடயத்தையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது உரையின் சாரம்சம் வருமாறு:

இலங்கை மக்கள் அன்று மத ரீதியிலான அடிப்படைவாத அச்சத்தில் உறைந்திருந்தனர். ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பு வீழ்ச்சி கண்டதை மக்கள் அவதானித்தார்கள். கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிழையான தீர்மானங்கள் காரணமாக எமது புலனாய்வுப்பிரிவு பலவீனமடைந்ததோடு, பாதுகாப்புப் பிரிவு சர்வதேசத்திற்கு முன்பாக அகௌரவப்பட்டது. எமது புராதன இடங்கள், தொல்பொருள் பகுதிகள் பகிரங்கமாக அழிக்கப்பட்டன.

2009ஆம் ஆண்டு நாங்கள் முடிவுறுத்திய ஆயுதப் போராட்டம் மிகவும் பயங்கரமான தோற்றத்தில் மீண்டும்உருவாகியது. தேசிய பாதுகாப்பு குறித்து தற்போது வரை பாரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கின்றோம். பொறுப்புடைய பதவிகளுக்கு தகுதியான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு துன்புறுத்தல்களினால் வீழ்ச்சியடைந்த பாதுகாப்புப் பிரிவின் மனநிலையை மீண்டும் நாங்கள் உறுதிப்படுத்தினோம். அன்று பலவீனமடைந்த புலனாய்வுப் பிரிவை மீண்டும் மறுசீரமைத்துள்ளோம். கடந்த ஆட்சிக்காலத்தில் மறக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். பாதாள உலகை கட்டுப்படுத்தியுள்ளோம்.

போதைப்பொருள் கடத்தல், பாவனையையும் ஓரளவுக்கு கட்டுப்படுத்தியுள்ளோம். எமது கலாசாரம் உட்பட அனைத்தையும் அவமானப்படுத்தும் யுகத்தை நிறுத்தினோம். அனைவரினதும் அடையாளங்களைப் பாதுகாத்து, மற்றவர்களுக்கு இடையூறு அற்ற சமாதானமான சூழலை உருவாக்கிக் கொடுத்துள்ளோம். கடந்த காலத்தில் அச்சுறுத்தலை எதிர்கொண்ட அம்பாறை பொத்துவில் கடலோர விகாரை, தீகவாபி போன்ற கலாசார மத உரிமைகளை நாங்கள் பாதுகாத்துள்ளோம். இன்று எமது நாட்டு மக்கள் இனியும் ஒற்றையாட்சி குறித்து அச்சமடையத் தேவையில்லை. எமது நாட்டு உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு எமது அரசாங்கம் எந்த வகையிலும் இடமளிக்காது. தேசிய பாதுகாப்பை எனது அரசாங்கம் உறுதிசெய்துள்ளது.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும் வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டிய தருணத்தில் செலுத்த முடியாமற் போகும் என்று எதிர்கட்சியினர் வெளியிட்ட ஆருடங்களை தகர்த்தெறிந்து இலங்கையினால் கடன்களை சரியான நேரத்தில் செலுத்த முடிந்துள்ளது.

பல்வேறு சமூக வலைத்தளங்களில் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு இடங்கொடுக்கப்படவில்லை. தனிப்பட்ட ரீதியில் சில விம்பங்களை பெரிதுபடுத்திய போதிலும் அரசாங்கத்தின் உண்மையான பக்கங்களை மக்களுக்கு வெளிப்படுத்துவது தடுக்கப்பட்டது. அதனால் மக்கள் மத்தியில் அரசாங்கம் மீது பொய்யான விம்பமே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனது ஆட்சியில் எந்த அரசியல் நியமனங்களும் மேற்கொள்ளவில்லை. நீதித்துறையிலும் அதேபோன்ற கொள்கையையே பின்பற்றினோம். கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளை திருத்திக் கொண்டு முன்நகர்ந்து பயணிப்போம்.

அரசாங்கம் இன்று பலவீனமடைந்திருப்பதாகவும், தோல்வியடைவதாகவும் விமர்சனம் வெளியிடுபவர்கள், நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, தனிப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்ததோடு, அவை இன்று நிறைவேற்றப்படாத காரணத்தினாலாகும்-என்றார். (அ)

## குடாநாட்டில்...

வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இத் தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மூலம் மக்களுக்கு அறிவிக்கப்படும்.

பொதுமக்கள் இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கு செல்லும்போது முதல் தடவை தடுப்பூசி பெற்றுக் கொண்டமையை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினால் வழங்கப்பட்ட அட்டையை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சிலவகை மருந்துகள், ஊசி மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கும் மற்றும் வேறு ஆபத்துக்குரிய நோய் நிலைமை உடையவர்களுக்கும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் சாவகச்சேரி, தெல்லிப்பளை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற ஆதார வைத்தியசாலைகளில் முதல் தடவை வழங்கப்பட்டதை போன்றே ஜூலை மாதம் 03 ஆம் திகதி சனிக்கிழமை இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு வழங்குவதற்காக பிரத்தியேகமாக தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் மற்றும் காச நோயாளர்களுக்கான தடுப்பூசி வழங்கும் திட்டம் யாழ்.மாவட்டத்தில் உள்ள நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட நோயாளர்களுக்கான கொவிட் தடுப்பூசி இன்று சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற ஆதார வைத்தியசாலைகளில் வழங்கப்படும். இவர்கள் தாம் சிகிச்சை பெறும் சிகிச்சை நிலையத்திற்கான பதிவு (கிளினிக் கொப்பி, நோய் நிர்ணய அட்டை ) மற்றும் உரிய ஆவணங்களுடன் தமக்கு அருகில் உள்ள மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் ஏதாவது ஒன்றுக்கு சென்று இவ் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலும் 18 வயதிற்கு மேற்பட்ட காசநோய் மற்றும் மார்பு நோய்களுக்காக சிகிச்சை பெற்றுக்கொண்டிருப்பவர்கள் யாழ்ப்பாணம் காசநோய் சிகிச்சை நிலையத்துக்கு இன்று சனிக்கிழமை காலை சென்று தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்-என்றுள்ளது. (அ-03)

## நேற்றும் 1,859...

நாட்டில் பல வாரங்களின் பின்னர் நாளாந்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த இரு நாட்களாக இரண்டாயிரத்தை விடவும் குறைவாகப் பதிவாகியுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 49 ஆயிரத்து 926 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,843 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 14 ஆயிரத்து 668 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 396 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## தொற்றாளர்களின்...

“இதே முறையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு மக்கள் உதவ வேண்டும். நாட்டில் அமுலில் இருந்த பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் வாரங்கள் தொடர்பில் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். ஏதாவது ஒரு முறையில் தினசரி தொற்றாளர்கள் அதிகரித்தால் பயணத் தடையை அல்லது முடக்க நிலையை அமுல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

எனவே, மக்கள் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றல் மற்றும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும். பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டா லும் மாகாணங்களுக்கு இடையிலான தடை தொடரும்.

நாட்டின் அடுத்தகட்ட நிலைமை மக்கள் கையிலேயே உள்ளது. யாருக்குக் கொரோனாத் தொற்று உள்ளதென யாருக்கும் தெரியாது. இதனால் மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்” - என்றார். (இ)

## எரிபொருள்...

பொகவந்தலாவை - ஹட்டன் பிரதான வீதியின் ஊடாகவே சைக்கிளில் அவர்கள் சபை அமர்வுக்கு வந்தனர்.

இதன்போது, “எரிபொருள் விலையேற்றத்தை உடனடியாகக் குறை’, “விலைவாசியை ஏற்றி பொதுமக்கள் வயிற்றில் அடிக்காதே“, ‘நல்லாட்சி அரசை குறைகூறி வந்த ராஜபக்ஷ இன்று மக்களின் வயிற்றில் அடிக்கின்றது“ போன்ற பதாகைகளுடன் அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (இ)

## மாற்றமடையும்...

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை அழைத்துள்ளார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருக்கே இந்த அழைப்பை அவர் அனுப்பியுள்ளார்.

இந்த அழைப்பில் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருப்பதாவது:

“கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலின் பின்னராக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் அடிப்படையில் சிக்கல் மிகுந்த பிரச்சினைகளுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுத்து நிற்கிறோம்.

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அரசாங்கம் எமது தாயக பரப்பில் காணி நிலங்களை அபகரித்து வருகிறது. தொல்லியல், அபிவிருத்தி, மாவலி திட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என பல காரணங்களை கூறினாலும் அடிப்படையிலேயே திட்டமிட்ட குடியேற்றங்களை குறிவைத்த நடவடிக்கைகளாக இவை அமைந்திருக்கின்றன. அதேபோன்று மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரங்களை மெதுவாக அரசாங்கம் கையகப் படுத்தி வருகின்ற சூழலையும் காணுகிறோம். இவற்றை தடுத்து நிறுத்தவும் இருக்கக் கூடிய அதிகாரங்களை பாதுகாக்க வேண்டிய கடப்பாடும் எங்களுக்கு இருக்கின்றது.

சர்வதேச சூழலிலேயே எமக்கு சார்பான பல விடயங்களுக்காக வல்லரசு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் இவ்வேளையில் நாம் ஒருமித்த நிலைப்பாட்டில் அரசியல் விடயங்களை தாயகப் பரப்பில் கையாள்வதன் மூலம் சாதகமான உள்ளக அரசியல் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்த முடியும்.

ஆகவே காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு எந்தெந்த விடயங்களில் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்ட தமிழ்த் தேசிய கட்சிகள் ஆகிய நாங்கள் ஒருமித்த நிலைப்பாட்டில் வினையாற்ற முடியும் என்ற ஆரம்பகட்ட மெய்நிகர் இணையவழி ஊடான கலந்துரையாடலுக்கு உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

தேர்தல் நோக்கங்கள், கட்சி நலன்கள் மற்றும் தனிப்பட்ட விரோதங்களை தாண்டி செயல்படும் நோக்கத்திலேயே இந்த அழைப்பு விடுக்கப் படுகிறது. நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணிக்கு இச்சந்திப்பில் கலந்து கொள்ள உங்கள் சம்மதத்தை எதிர்பார்த்து இருக்கும்” என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் மேலும்...

கிழமை தெரிவித்துள்ளது.

இவ்வாறு மரணித்தவர்களில் 26 ஆண்களும் 22 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்பு இரண்டாயிரத்து 862 ஆக அதிகரித்துள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## மனப்பயமே...

கள் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவன் தெரிவித்தார்.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் பெருமளவில் திடீர் உடல் நலப் பாதிப்புக்கு உள்ளாகியதாக வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டுள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சினோபார்ம் தடுப்பூசி யாழ்ப்பாணத்தில் ஐம்பதாயிரம் பேருக்கு செலுத்தப்பட்டுள்ள அதேவேளை, நாடு முழுமையிலும் பல்வேறு பகுதிகளிலும் செலுத்தப்பட்டுவருகின்றபோதிலும் எவருக்கும் எந்தப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் அனைவரும் சில மணி நேரங்களில் வீடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்-என்றார்.

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நேற்று முன் தினம் தொடக்கம் சினோபார்ம் தடுப்பூசி செலுத்தப்பட்டுவருகின்றது.

இந்நிலையில் நேற்று காலை தொடக்கம் குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 63 பேர் திடீர் பாதிப்புக்கு உள்ளானதாகத் தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டமையால் பரபரப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சாவகச்சேரி...

மரின் இணைப்பு செயலாளர் காசிலிங்கம் கீதநாத் நேற்று அப்பகுதிக்குச் சென்று பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் நேரடி கள ஆய்வில் ஈடுபட்டார்.

பிரதமரினால் வழங்கப்பட்ட உத்தரவுக்கமைய பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற உத்தரவு அரச அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தகுதியுட 38 பேரின் விபரங்கள் நீக்கப்பட்டு அரசியல் செல்வாக்கால் வேறு 40 பேர் பயனாளிகளாக உள்வாங்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பட்டியலைப் புதிதாக திருத்திச் செய்வதற்கு பிரதேச செயலர் நேற்றைய கூட்டத்தில் இணங்கியுள்ளார்.

இதன் அடிப்படையல், கூட்டம் முடிந்ததன் பின்பாக - பட்டியலை திருத்தி, தகுதியுடையபயனாளகளை உள்வாங்கி பட்டியலைத் தயாரிக்கும்படி, பிரதேச செயலக திட்டமிடல் பிரிவுக்கு பிரதேச செயலர் உத்தரவு இட்டுள்ளார்.

வீட்டுத் திட்டம் வழங்கலோடு தொடர்புடைய ஏனைய அலுவலர்களான - கிராம சேவகர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் நேற்றைய கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவர்களுக்கு பிரதேச செயலரால் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கவில்லை என்றும் தெரியவருகின்றது.

ஈழநாடு
Eelanadu

# அனைத்து அரசியல் கைதிகளையும் விரைவில் விடுதலை செய்யுங்கள்!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி

கொழும்பு, ஜூன் 26

"அனைத்து அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப பட வேண்டும் என்பதே ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பாடுபடுகின்றவர்களின் நீண்ட கால கோரிக்கையாகும்."

- இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செய லாளர் சி. கா. செந்திவேல் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "நீண்டகாலம் சிறைவாழ்வை அனுபவித்து வருகின்ற பல அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டிய நிலையில், தமது தண்டனைக் காலம் நிறைவடைந்து சட்டப் படி விடுதலை பெற இருந்தவர்களான சில தமிழ் அரசி யல் கைதிகளையும் இப் பொதுமன்னிப்பில் விடுவித்து, இந்த அரசு நல்லதோர் அரசியல் நாடகத்தை நடத்திள் ளமை, பெரும் எதிர்பார்ப்பில் இருந்த அரசியல் கைதிகளின் உறவுகளுக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளது. இதனை அரசியல் கைதிகளின் நீண்டகாலப் பிரச்னைக்குரிய தீர்வாக எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, நீண்ட காலமாக விசாரணை இன்றியும், விசாரணையிலும், தீர்ப்பளிக்கபட்டும் சிறைகளில் இருந்துவரும் அனைத்து அரசியல் கைதிகளும் நிபந்தனை இன்றி விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்" - என்றுள்ளது. (இ)

# தமிழ் தேசிய அரசியல் தலைமை அத்திவாரம் ஆட்டம் கண்டுள்ளது!

## ஆளுந்தரப்பு எம்.பி. சுரேன் ராகவன் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 26**

**பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் ஒரு சில தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளின் அத்திவாரம் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது என சிறீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இலங்கைத் தமிழ் அரசியலில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. இப்போதாவது இது நடந்திருப்பதைக் குறித்து ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அதேபோல் தமிழ் அரசியலைப் பற்றி கரிசனையடையவர்கள் சந்தோஷமடைய வேண்டியதுமாயிருக்கின்றது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் முழுமையாக 93 கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். சாதாரணமாக ஒவ்வொரு பொசன் மற்றும் வெசாக் நாட்களில் இது நடைபெறும் விடயமாக இருந்தாலும் வியாழக்கிழமை நடந்த விடயத்திலிலுள்ள விசேட விடயம் என்னவென்றால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருந்த 16 பேர் விடுவிக்கப்பட்டனர்.

அரசியல் வரலாற்றில் அரசியல் நியமங்களின்படி கைதிகளை விடுவிப்பதானது இருதரப்பினருக்கு இடையே இடம்பெறுகின்றதாகும். அது போர்க் கைதிகள் அல்லது வேறு கைதிகளாகவும் இருக்கலாம். கைதிகளை விடுவிக்கின்ற முக்கிய கலாசாரத்தின் நோக்கம் என்பது, விழுந்திருக்கின்ற அல்லது இல்லாமல் போயுள்ள உறவை வளர்த்தெடுப்பதற்கு எடுக்கின்ற முயற்சியாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த இம்முயற்சி பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை விவாதிக்கப்பட்டது. அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தன்னுடைய வாழ்க்கையில் சிறையில் அனுபவித்த கண்ட கதைத்த தமிழ் பேசும் அரசியல் கைதிகளின் வேதனையை உணர்ந்தவராக பிரேரணையை முன்வைத்தார். முதன்படி ஜனாதிபதிக்கும், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும், நிதி அமைச்சர் அலி சப்ரிக்கும் எனது நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

நீண்டகாலமாக சிறைகளில் பெற்றோர், பிள்ளைகளை இழந்து இருந்த அந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீண்டும் ஒரே கூரைக்குள் இரவு உணவை அருந்தியிருப்பார்கள். அதன் பின்னணியில் இன்னுமொரு விடயம் இடம்பெற்றது.

பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் நடந்துகொண்ட விதம் துக்ககரமாகவே இருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவராக இருந்தாலும்கூட நான் ஆளுநராக இருந்த காலத்திலும் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மேற்கொண்ட முயற்சிகளின் பேரில் இந்த விடயம் இடம்பெற்றிருப்பதை தமிழ் தேசியவாத அரசியல்வாதிகள் ஏற்க மறுக்கின்றனர். சில நேரங்களில், இப்படியான முக்கிய கேந்திர அரசியல் தீர்வுகளைக் காணும்போது, அவர்களுடைய எதிர்கால அரசியல் வெறுமனே நின்றுவிடுமோ என்ற அச்சம் அவர்கள் மத்தியில் இருக்கின்றதோ என்ற கேள்வி எழும்பியுள்ளது.

அரசியல் கைதிகள் இன்னும் பலர் உள்ளனர். 106 பேர் இன்னும் சிறைகளில் உள்ளனர். அவர்களையும் நாங்கள் விடுதலை செய்ய வேண்டும். அதற்கான பேச்சை நடத்த வேண்டும்" - என்றார். (இ)



# இராணுவ ட்ரக் நீரோடையில் வீழ்ந்ததில் இருவர் உயிரிழப்பு; நால்வர் படுகாயம்!

## மட்டக்களப்பில் நேற்று சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 26

மட்டக்களப்பு, செங்கலடியிலுள்ள கறுத்தப்பாலத்தின் கீழே நீரோடையில் வீழ்ந்து இராணுவரக் நேற்று விபத்துக்குள்ளானதில் இரு இராணுவத்தினர் உயிரிழந்தனர். அத்துடன், மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக் கட்டுப்பாட்டை மீறிய நிலையிலேயே ட்ரக் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நீரோடையில் இருந்து இராணுவ ரக்கை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி- பண்டிதர் திருநாவுக்கரசு



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு
பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- காசி
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-ஜனாதிபதி பொது மன்னிப்பில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ததில் தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு




7.00 மணி : ICTA - விசேட நேர்காணல்



7.30 மணி : சுப்பர் குறுாப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்
10.00 மணி : நெற்றிக்கண்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமரலை)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : அன்ரியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : களீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு